


ஆசிரியர்:
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம்:
43, மஹாதானத்தெரு, மாயவரம்.

மாத வெளியீடு

| | | |
|---|---|---|
| மாலை 8 | NOVEMBER 1942 :: சித்திரபானு ௵ கார்த்திகை ௴ | முத்து 5 |

## பொருள் அடக்கம்

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | என் கனவு | கா. சி. வேங்கடரமணி | 206 |
| 2 | காகிதக் கைத்தொழில் | பி. பாலசுப்ரமணியம் | 209 |
| 3 | மகந்தீபம் | வே. சுப்ரமண்யன் | 213 |
| 4 | தீபாவளி - சில கருத்துக்கள் | டாக்டர். டி. எஸ். திருமூர்த்தி | 220 |
| 5 | அவர் கற்ற படிப்பினை | பி. எஸ். சுப்ரமண்யம் | 223 |
| 6 | தர்மம் | க. நா. சுப்ரமண்யம் | 226 |
| 7 | ஏழையின் திருநாள் | எல். ஆர். விசுவநாதன் | 229 |
| 8 | தமிழின் பெருமை | டாக்டர். உ. வே. சாமிநாதையர் | 234 |
| 9 | தீபாவளி | 'அண்ணன்' | 238 |
| 10 | கோபாலன் கோமகனானது | சீகாழி 'மணி' | 240 |

"பாரதமணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

# என் கனவு

கா. சி. வேங்கடரமணி

"முருகன்—ஓர் உழவன்" என்ற நவீனத்திற்கு ஈசுவர கிருபையால் என்னுடைய ஐந்தாவது வயதிலேயே நான் கோட்டும் மழையில் விளையாடி மழைத்தண்ணீரை அணைபோட்டுப் புரட்டித் தோட்டத்திற்குப் பாய்ச்சினபோதே பிள்ளையார்சுழி போட்டுவிட்டேன்......

[4]

என் இளமைப் பிராயத்தின் பல செயல்களை நான் மறந்துவிட்டேன். இயற்கையிலேயே இன்றையச் செயல்களை நாளையதினமே மறந்துபோகிறவன் நான். ஆனாலும்சிலவிஷயங்கள் அற்பமாக இருந்தாலும் மனதிலேயே வடுவைப் போல் அழியாமல் நிற்கிறதும் உண்டு.

என் இளமைப் பிராயத்தின் முதல் விளையாட்டாக இன்னும் என் மனதில், ஞாபகத்தில், அழியாமல் ஓர் சம்பவம் நிற்கிறது.

அப்போது எனக்கு வயது சுமார் ஐந்து இருக்கும். செங்கற்பட்டு ஜில்லாவில் ஓர் குக்கிராமம். மரக்காணத்தைச் சேர்ந்த சம்மஞ்சேரி என்னும் ஓர் சிறிய ஊர். அதுவும் சமுத்திரக்கரை ஓரம்—என் வாழ்நாள் முழுவதும் கடலோசை அருகிலேயே இருந்து வாழ்ந்து வருகிறேன். நான் இதை எழுதும்போது கூட என் காதில் கார்த்திகைக் கடல் பொங்கி எழுந்து, சர்ப்பம் போல அலைகள் தலையெடுத்து, வருணபகவானை அழைக்கின்றது.

நாற்பத்தெட்டு வருஷங்களுக்குமுன்: காலையில் சுமார் மணி எழரை இருக்கும்—பழைய மணி! காலம் மாரிகாலம். என் தகப்பனர் உப்பளங்களைச் சுற்றிப் பார்க்க காக்கி உடுப்புக்களை அணிந்து கொண்டு தற்கால யுத்தவீரன் போலத் தயாராக ஒற்றைக் காலால் நின்றவண்ணம் சற்று அலுத்து அங்குமிங்கும் பார்த்தவாறே இருந்தார்— ஒன்றுக்கும் காக்காத, காக்கத் தெரியாத, மந்திரி ஐயாவையர் வம்சத்தில் பிறந்தவர். நன்ருய் ஆங்கிலம் படித்துத் தைரிய லக்ஷ்மியைக் கைக்கொண்ட என்தகப்பனர் வக்கீலாகப் போக வேண்டியவர்— கம்பீரமான பார்வையும், ஜட்ஜைமடக்கித் தூக்கிக் கொண்டு போகக்கூடிய குரலையும் உடையவர். அதிர்ஷ்டக் குறைவால், தட்டுக்கெட்டுப்போய் உப்பு இலாகாவில், கள்ளுஇலாகாவில், போய்ச்சேர்ந்து சர்க்காருக்கு முப்பது வருஷம் உழைத்தார். காக்கத்தெரியாதவர் அதில் முன்னேற்ற மடைய வெகுகாலம் காத்துக் கொண்டிருந்தார். என் தந்தையின் முகத்தைப் பார்த்துப் பார்த்துத்தான் நான் ஒருநாளும் சர்க்கார் உத்தியோகமாகிற சேவக விருத்திக்குப் போகிறதில்லை என்ற தீர்மானத்தை இளமையிலேயே கொண்டேன்.

பூட்ஸ் அணிந்த காலால், படபடப்புடன் தரையைத் தட்டினர். சமீபத்தில்

இருந்த 'கான்வாஸ்' போட்ட சாய்வு நாற்காலியில் சற்று அமர்ந்தார்.

காலம் மாரிகாலம். விறகோ, வாங்கின விறகு, ஈர விறகு. அடுப்பு எரியவில்லை. என் தாயார் தலை குனிந்து விடாமல் கண்ணைக்கசக்கி அடுப்பை ஊதிக் கொண்டிருந்தாள். இன்னும் காப்பி தயாராகவில்லை.

வானத்தில் மேகம் இருண்டு இடியும் மின்னலும் முழங்கின. மழை பிடிக்கும் முன் ஆபீசுக்குப் போக வேண்டுமென்று தகப்பனர் அவசரப் பட்டார். அவர் அப்படிச் சொல்லி வாய் மூடவில்லை— ஆலங்கட்டி மழை திடீரென்று ஒரு செவி பெய்தது. மழை பெய்துகொண்டிருக்கும் போதே நான் ஒரே ஓட்டமாய்த் தெருவில் மேற்குத் திக்கை நோக்கி மழையில் ஓடினேன். ரோடுக்குப் பக்கத்தில் மழை ஜலம் ஓர் அருவியாக அழகாய் ஓடிக்கொண்டிருந் தது. அது எங்கள் வீட்டிற்கு நேராகப் போகாமல், ஓர் பள்ளத்தில் விழுந்து விரைகிக்கொண்டிருந்தது. எங்கள்வீட்டு வாசலில் ஓர் சிறிய நந்தியாவட்டை, அரளி, புஷ்பத்தோட்டமேஉண்டு அக்கம் பக்கத்தில் கிடந்த கற்களையும், கிளைகளை யும், மண்ணையும் கொண்டு போய்ச் சேர்த்து, கொட்டும் மழையிலேயே அந்த மழை ஜலத்தின் ஓட்டத்தைத் தடுத்துத்திருப்பி எங்கள் வீட்டுப்பக்கம் வெள்ளத்தை மாற்றி எங்கள் தோட் டத்திற்கு ஜலத்தைக் கொண்டு வந்து சேர்த்துவிட்டேன். எல்லாம் கொட்டும் மழையிலேயே. இந்த ஐந்தாவது வயதில் இருந்த செயலைக்கூட எம்.ஏ., பி.எல்., வெற்றியை அடைந்த பிறகு நான் இழந்து விட்டேன்.

கொட்டும் மழையில் நான் விளையாடு வதை என் தாயாரும், தகப்பனரும் சகிக்கவில்லை. தாயார் வாசலில் நின்ற படி வைது கூப்பிட்டுக் கொண்டிருந் தாள். என் கையைப் பிடித்து அவர்கள் இழுக்காத காரணம்— தாயாருக்குப் புடவை நனைந்து விடுமோ என்ற பயம்; தகப்பனரோ காக்கி உடையில் இருக்கி ருர்! தவிர, தாயார் தகப்பனர் பேசிக் கொண்டிருந்தது இன்னும் என் காதில் நிற்கிறது.

"குழந்தைக்குக் காவேரிப்பட்டினம் சாயல் பூராவும் இருக்கிறது போலிருக் கிறது!" என்ருள் என் தாய்.

"ஆம். குழந்தை, சதாசிவம்சாயலாய் இருப்பான் போலிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டு, என் விளையாட்டை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந் தார் என் தந்தை. பக்கத்தில் நின்ற ஜவான்களை விட்டுப் பிடித்து இழுத்துக் கொண்டுவரச் சொல்லவில்லை.

குழந்தைகள் செல்வத்திலும் சுயேச்சையிலும் வளரவேண்டுமென்ற கொள்கையைப் பூரணமாக நம்பி என் தகப்பனர் அனுஷ்டானத்தில் கொண்டு வந்தவர். அவர் என் இருபத்தெட்டாவது வயதில் காலமானர். அது வரையில் அவர் என்னைக் கையாலோ கழி யாலோ தொட்டு அடித்தவரே அல்ல. அதட்டினவர் கூட அல்ல.

சதாசிவம் என்பவர் எனக்குச் சித் தப்பா. ஆங்கிலத்திலும் வைத்தியத்திலும் நிபுணர். அதி தீவிரவாதி. ஜெயநீருக்காக (Alchemy) சொத்து சுதந்திரத்தை இழந்தவர். விஞ்ஞானம் மூலமாகப் பிரும் மத்தைக் கண்டுபிடிக்க மிக்கபாடுபட்ட வர். சமீபத்தில்காலமானர். எப்பொழுது மழை பெய்தாலும், அவர் எந்த வேலை யிலிருந்தாலும், குதூகலத்துடன் சமீபத் திலிருந்த வஸ்துக்களை எல்லாம் வாரி

எறிந்துவிட்டுத் தெருவில் மழையில் ஓடி வந்துவிடுவார். அல்லது கூடல்வாய் மூலையில் பரமானந்தத்தைக் கண்டவர் போலக் களித்து நிற்பார். அந்த சமயத்தில் அழகான ஆங்கிலத்தில் பேசுவார் கண்ணில் ஆனந்தம் ஜ்வலிக்கும்.

“ பிறர்கள் பைத்தியம் என்று சொல்வார்கள் வேங்கடரமணி, ஆனால் நீ விஷயம் தெரிந்தவன், அப்படிச் சொல்ல மாட்டாய் ” என்று அவர் எனக்குப் பல முறை சொல்லியிருக்கிறார்.

‘முருகன், ஓர் உழவன்’ என்ற நவீனத்திற்கு ஈசுவர கிருபையால் என்னுடைய ஐந்தாவது வயதிலேயே நான் இப்படிக் கொட்டும் மழையில்விளையாடி மழைத் தண்ணீரை அணைபோட்டுப் புரட்டித் தோட்டத்திற்குப் பாய்ச்சின போதே பிள்ளையார்சுழி போட்டு விட்டேன் என்று நினைக்கிறேன்.

[தொடரும்]


## படித்துப் பாருங்கள்!

**கா. சி. வேங்கடரமணி எழுதிய**

ஜடாதரன் முதலிய கதைகள் ரூ. 1—8—0
தேசபக்தன் கந்தன் ரூ. 2—8—0

**வே. நாராயணன் எம்.ஏ., பி.எல்., தமிழ்ப்படுத்திய**

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்
[ஸ்ரீமத் ஆதி சங்கரபகவத் பாதர்களின்
பாஷ்யத்துடன்] ரூ. 1—0—0

**ஸ்வா. ஸேதுராமன் எழுதிய**

தீபாவளி முதலிய கதைகள் ரூ. 1—8—0

## சுவேதாரண்ய ஆசிரமம்,
43, மகாதானத்தெரு, மாயவரம்.

# காகிதக் கைத்தொழில்

பி. பாலசுப்பிரமணியன்

## I

முன் நாட்களில் இந்திய மக்கள் பல வித சாமான்களை எழுத உபயோகப் படுத்தினார்கள். முக்யமாக பூஜா, பத்ரங்கள், பனையோலை, மிகவும் வழவழப்பும் உறுதியும் உள்ள துணிகள் இவைகளைக் குறிப்பிடலாம். இவைகளின் மேல்பாகம் மிருதுவாகவும், எழுதினால் சுத்தமாகவும் தோன்றியதால் உபயோகிக்கப்பட்டன. இன்றும், இந்துக்களின் வீடுகளிலும் கண்காட்சிசாலைகளிலும் இவைகள் மூட்டை மூட்டைகளாக இருப்பதைக் காணலாம்.

கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்பே சீனர்கள் கந்தைத் துணியினின்றும், மூங்கிலினின்றும் காகிதம் செய்வதை கண்டு பிடித்தனர். எட்டாம் நூற்றாண்டு வரைக்கும் இவ்விஷயம் ரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது. ஒன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சீனர்கள் சிலர் முகம்மதியரால் கைதிகளாக்கப்பட்டு ஸாமர்க்கண்ட் நகரத்தில் சிறையில் வைக்கப்பட்டனர். அங்கு அவர்களைப் பலவந்தப்படுத்தி காகித உற்பத்தி செய்யும் முறையை வெளிப்படுத்தினார்கள். அதனின்றும் பொக்ஹாரா நகரில் இருந்த முகமதிய அடிமைகள் மூலமாயும், அராபியர்களால் ஐரோப்பாவின் தெற்குப் பிராந்தியத்தில் பருத்தியினின்றும் காகிதம் செய்யும் முறை வெளிப்படுத்தப்பட்டது. காகிதம் செய்யும் முறையில் உள்ள எல்லா வழியும் ஹிந்துக்கள் நன்கு அறிந்திருந்தனர் என்றும், ஆனால் மதாச்சாரத்தாலும், வேறு ஏதோ சில காரணங்களாலும் இதைக் கைவிட்டிருக்கவேண்டுமென்று பலசான்றுகளினின்றும் தெளிவாகிறது. மத்ய ஆசியாவில் உள்ள மகம்மதியர்கள் பக்கத்து தேசத்தினரான சீனர்களிடமிருந்தும் இத்தொழிலை எளிதில் கற்றிருந்தனர்.

பத்தாவது நூற்றாண்டில் கஜனி மகம்மதுவின் படையெழுச்சிகளின் பொழுதுதான் முஸ்லிம்களால் காகிதம் செய்முறை இந்தியாவிற்கு அறியப் படுத்திருக்கக் கூடும்.

புராதன காலத்து காகிதம் செய்வோர்களும், காகித உற்பத்திக்கு நல்ல தண்ணீரின் அவசியத்தை உணர்ந்திருக்கிறார்கள். காகிதக் குழம்பை சுத்தம் செய்வதற்கும், காகிதம் நேர்த்தியானதாக இருப்பதற்கும், தண்ணீர் நல்லதாகவும், கடுப்பு இல்லாமலும், சுத்தமாகவும் இருக்கவேண்டும்! ஆதலால் தான் அன்றைய முஸ்லிம் காகிதத் தொழிலாளர்கள், இயற்கையாக இம்மாதிரியான பல் சாதனங்களை தன்னகத்தேபெற்று, வியாபார ஸ்தலங்களாக சிறந்து விளங்கிய சிந்து நதிப் பள்ளத்தாக்கு, காஷ்மீரம், ஸயல்கோட் முதலிய இடங்களில் குடியேறினர் போலும்! இக்காகிதக் கைத்தொழில் வெகு நாட்கள் வரை ஒரு மர்மமாகவே வைக்கப்பட்டு, நாளாவட்டத்தில் உலகினர் அறிந்த ஒரு பெருங் கைத்தொழிலாக இன்று விளங்குகிறது. தென்னிந்தியாவில் மஹாராஷ்டிரர்களால், தங்கள் கைதேர்ந்த அறிவில் சிறந்த பீஷ்வாக்கள் மூலம் இக் கைத்தொழில் மேலும் பல அபிவிருத்திகளுடன் விளக்கப்பட்டது.

## II

புராதன காலத்திலிருந்தே அதிக மதிப்பும் செல்வாக்கும் பெற்று உன்னத நிலைக்கு வந்து கொண்டிருந்த இக் கைத்தொழில் மிகச் சீர்கேடான இந்நிலைக்கு வரக்காரணம் என்ன என்று எண்ணலாம். ஆச்சரியப்படவும் கூடும். ஆம்! உண்மையில் அறிவு

நுட்பம் பெற்ற பீஷ்வாக்களாலும், திறமைசாலிகளான முஸ்லிம்களாலும் மேன்மேலும் அபிவிருத்தி அடைந்து தான் வந்தது. ஏதோ சில காரணங்கள் ஒன்று சேர்ந்து, இயற்கையிலேயே வளர்ந்து சில ஜில்லாக்களில் பரவு வதையும், முக்யமாக ஸ்திரம்பட்டிருந்த சில இடங்களிலும் இக் கைத் தொழிலுக்கு பெரியதோர் இடர்செய்து அபிவிருத்தி அடையாது நசித்துப் போகும்படி செய்து விட்டன. முதலாவதாக, குடிசைகளில், ஒரு சில மனிதர்களால், கையினால் செய்து வந்த இத்தொழில், சிறைக்கோட்டம், முதலான பொதுஜன ஸ்தாபனங்களால் செய்யும்படி பரவியதே காரணமாகும். இரண்டாவதாக, இக் காகிதத் தொழில், குடிசையில் கையினால் தேவைக்குபோது மான அளவு செய்வது போக அதிக அளவில்,பெரிய யந்திரங்களில் உற்பத்தி செய்வது ஆகும். ஆனால் 1870ம் ஆண் டில்தான் அவர்கள் காகிதத்தின் தன்மை யையும், உறுதியையும் மேன்மை படுத்தும் பொருட்டு, பல்வேறு நார் பதார்த்தங்களை சோதனை செய்தும்,கைத் தொழிலில் ஈடு படுத்திப் பார்க்க வந் தனர். சிறைக்கோட்டங்களில் உற்பத்தி செய்த காகிதங்களில் கேவலமாக நினைக்கும் அளவில் போட்டி நடந்தது. எல்லா பொதுஜன ஸ்தாபனங்களும், தனிப்பட்ட தொழிலாளியால் உற்பத்தி செய்யக்கூடியகாகிதங்களைக்காட்டிலும் மலிவாகக்கிடைக்கக்கூடிய சிறைச்சாலை யில் உற்பத்தி செய்யப்பட்ட காகிதங் களை உபயோகிக்கும்படி கட்டாயப் படுத்தப்பட்டனர். இம்மாதிரியாக குடிசைத் தொழிலாளி தன் ஊதியத்தை இழந்தான். அதன் காரணமாகவே, தேவைக்குத் தக்கவாறு நல்ல தினுசு காகிதங்கள் இல்லாமல், சிறைச்சாலை யில் செய்த காகிதங்கள் மிகவும் மட்ட ரகமாகப் போய், காகிதக் கைத்தொழில் சீர்குலைய ஆரம்பித்தது. பொதுஜன ஸ்தாபனங்கள் தங்களைக் கட்டாயப் படுத்தி வாங்கச் சொல்கிற மிகவும் மோசமான இக்காகிதங்களைப் பற்றி அடிக்கடி குறை கூறி வந்தன. இம் மாதிரி, சர்க்கார் ஒரு முக்கியமான கைத்தொழிலை தன் கட்டாயத்தின் கீழ் வைத்துக்கொண்டு அதன் அபிவிருத் தியை கவனியாது வாளவிருந்தது மிகவும் கேவலமான ஸ்திதிக்கு இக்காகிதத் தொழிலைக் கொண்டு வந்து விட்டது.

மேனாட்டு முறையில் இயந்திரங்கள் மூலம் உற்பத்தி செய்யத்தொடங்கிய தானது, கையினால் செய்யக்கூடிய இக் காகிதத்தொழிலுக்கு இன்னும் பெரிய தொரு குந்தகத்தை விளைவித்தது. 1870ம் ஆண்டில் ஹூக்ளி நதிக்கரையில் பால்லி யந்திரசாலை (BALLEY MILLS) ஸ்தாபிக் கப்பட்டு முதன் முதலாக நம் நாட்டில் யந்திரத்தினால் காகிதம் உற்பத்தி செய்யப்பட்டது. 1882ம் ஆண்டில் ஏற்பட்ட டிடாக்கர் காகிதத்தொழிற் சாலை (TITAGUR MILLS) மேற்படி யந்திரசாலையை 1905ம் ஆண்டில் வாங்கி தங்கள் நிர்வாகத்தில் கொணர்ந் தனர். மேலும் இக்கம்பெனியார், இம்பீரியல் காகித தொழிற்சாலைக்குச் சொந்தமான கங்கினாரா யந்திரசாலை யையும் வாங்கி மிகவும் பிரும்மாண்ட மான சாலையொன்றை ஏற்படுத்தினர். மேலும் ராணிகஞ்சில் உள்ள வங்காள காகிதத் தொழிற்சாலை, மற்றொன்றாகும். 1895ம் ஆண்டில் தக்காண காகித யந்திர சாலை என்று ஒன்று பூனாவிலும், திருவாங்கூரில் புனலூர் என்ற ஊரில் ஒன்றும் பம்பாயில் இரண்டு வேறு யந்திரசாலைகளும் உண்டாயின. நம் மகாணத்தில் ராஜமகேந்திரத்தில் ஒன்று ஏற்பட்டுள்ளது.

ஆனால் ஆங்கிலேயர்கள் நம் நாட் டிற்கு வருமுன், நம் நாட்டிற்குத் தேவையான காகிதம் உள்நாட்டில் சிறிதும், மிகுந்தது சீனத்தினின்றும் தருவித்துக் கொள்ளப்பட்டது. ஸர் சார்லஸ் வுட் துரை இந்தியா காரியதரிசி யாக இருந்தகாலத்தில், சர்க்கார் காரி யாலயங்களுக்கானகாகிதங்கள், பிரிட்ட னிலிருந்து தருவிக்கப்பட்டன. மேனாடு களில் நடந்த கைத்தொழில் புரட்சி யினால், உற்பத்திக்கேற்ற செலவாகாமல்

இந்தியாவில் உள்ளவர்களை வாங்கும்படி செய்து சுரண்டப்பட்டது. இதற்கும் சர்க்கார் இந்தியாவில் உள்ள காகிதத் தொழிற்சாலைகள் தேவைக்கான, காகித உற்பத்தி செய்ய முடியவில்லை என்று நொண்டி சமாதானங் கூறினர். ஆனால் நிலைமை நேர் விரோதமாக விருந்ததால் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் சரியாக மார்கெட்டுநிலவரமும்,வியாபார பந்தோபஸ்தும் இருந்தால் கட்டாயம் தேவைக்கான உற்பத்தி செய்வதாகக் கூறினர். அது செவிடன் காதில் சங்கு ஊதியது போல் ஆயிற்று. இந்த விதமாகவே காகித யந்திரத்தொழில் மட்டும் அன்றி கையினால் காகிதத்தொழில் செய்வதும் அழிந்து கொண்டே வந்தது. சர்க்காரின் அவர்களுடைய சொந்தமான கையினால் செய்யும் காகிதங்களுக்கு அபரிமிதமான சலுகை இருந்த போதிலும், குடிசையில் செய்து வந்த காகிதங்களுக்கு ஓரளவு போஷணை, நம்நாட்டு வியாபாரிகளால் தரப்பட்டு வந்தது. இன்றும் தன் தேவைக்கு குடிசைத் தொழில் காகிதங்களையே உபயோகப் படுத்தி வருகிறார்கள்.

நாளாவட்டத்தில் இதுவும் அழியத் தலைப்பட்டது.யந்திரசாலைகளில் விணாகி விட்ட காகிதங்களினின்றும், கையினால் செய்த காகிதங்கள் வெளித் தோன்றின. இது கையினால் செய்த காகிதம் அன்று. மெஷின் காகிதத்தினின்றும் கையினால் செய்தகாகிதமாகும். உண்மையில் காகித கைத்தொழில் முன் இருந்த நிலையை அடைய வேண்டுமானால் முன்போல் இயற்கை சாதனங்களைக் கொண்டு பண்டை முறையைக் கைப்பற்றுதலே சாலத்தகும்.

## III

இதுவரை நாம் காகித உற்பத்தியின் பூர்வ சரிதம், அதன் வளர்ச்சி, கையினால் செய்யும் காகிதத் தொழில், யந்திரத்தினால் ஆன காகித தொழில், இவை யிரண்டின் இன்றைய நிலைமை, இவற்றைப்பற்றிச் சொன்னோம். குறிப்பிட்ட அளவு காகிதமே உபயோகித்ததால் ஏற்பட்ட மிகக் குறைவான கையெழுத்துப் பிரதிகளைப்பற்றி நாம் அறிகிறோம். அந் நாட்களில் புஸ்தகங்களின்றி, குருவினால் சிஷ்யர்களுக்கு வாய்ப்பாடமாக எல்லா வித்தைகளும் கற்பிக்கப்பட்டு ஒவ்வொரு பாடமும் மனப்பாடம் செய்யப்பட்டது. கையெழுத்துப் பிரதிகள் எடுப்பது அன்று அறியாத விஷயமாக இருந்தது. இன்று நாம், ஒவ்வொரு குறிப்பிட்ட நூல்களில் ஆயிரக்கணக்கான பிரதிகளைக் காணலாம். பிரிட்டிஷ் சர்க்கார், தங்கள் ஆட்சியில் கையினால் காகிதம் உற்பத்தி செய்வதை வளரவொட்டாமல் யந்திரத்தின் மூலம் காகிதம் உற்பத்தி செய்வதை வளரவிட்டனர். முதன் முதலாக நம்நாட்டில் மொகலாய ஔரங்கசீப்பின் ஆட்சியில் காகிதம் உபயோகிக்கப்பட்டு வந்தது. சர்க்கார் காரியாலயங்களின் தபால் போக்கு வரத்துக்கும், ஆட்சி முறைக்கும் காகிதம் பெருவாரியாக உபயோகிக்கப் பட்டதால், அதை 'காகித ஆட்சி முறை' என்றும் கூறினர்.

காகித உற்பத்தியின் இச்சீர்கேடான நிலைமைக்கு உற்பத்தியாளர் தான் காரணம் என்று குறை கூறப்படுகிறார்கள். அவர்கள் காகித வியாபாரத்தைத் தாங்கள் மட்டுமே ஆக்ரமித்துக்கொண்டு, நேர்மையான முறையில் வியாபாரம் செய்யாததுதான் காரணம். மேலும், எந்த மட்டரகமான காகிதம் மார்க்கெட்டிற்கு வந்தாலும், அதுதான் உயர்ந்த ரகம் என்று எண்ணுமளவில் உயர்ந்த ரகக் காகிதங்களே உற்பத்தி செய்யாது இருந்தனர். வாங்குபவர்கள், திருப்தியடைந்தாலும், அடையாவிட்டாலும், கிடைத்ததைக் கொண்டு உபயோகித்துக் கொள்ள வேண்டியிருந்தது. என்ன விலை சொன்னாலும் வாங்க வேண்டியது தான். ஆதலால் பொது ஜனங்களும், எது மிகவும் மலிவோ அந்தக்காகிதத்தை உபயோகிப்பது இயற்கை. புராதன காலத்து கையினால் செய்த

காகிதங்கள், யந்திரக் காகிதங்களைக் காட்டிலும், நயமாகவும் நேர்த்தியாகவும், உறுதியாகவும் இருந்தன. நீண்ட நாளைக்கு பழுதின்றி இருக்கக்கூடிய அம்மாதிரியான காகிதங்களைப் பொது மக்கள் தேவைக்குத் தக்கபடி உற்பத்தி செய்து கொள்ளக் கற்பிக்கவேண்டியது அவசியம். உபயோகத்திற்கான காகிதங்களை விலையின் மீது கணக்கிடக்கூடாது காகிதத்தின் மகிமையிலேயே பொது ஜனங்கள் கண்ணோட்டமாகயிருக்கின்றனர். மேனாட்டில் கூட இன்றும் முக்கியமான தஸ்தாவேஜிகளை கையினால் செய்த காகிதங்களில் எழுதி உபயோகித்து வருகிறார்கள். காகிதத்தொழிலின் சரிதம் உலகத்தில் உள்ள மற்ற தேசங்களில் எவ்வளவு தூரம் முன்னணியில் இருக்கிறது என்பது அந்நாடுகளில் செலவாகும் காகிதத்தினின்றும் எளிதில் கணக்கிடலாம். எவ்வளவு அதிகமாய் செலாவாணியாகிறதோ அவ்வளவு உயர்வு அடைந்திருக்கிறது என்று ஊகிக்கலாம். அது விஷயத்தில் நம்நாடு கடைசியில் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

ஜெர்மனிக்குச் சென்று காகித உற்பத்தி செய்வதில் பயிற்சி பெற்ற ஸ்ரீ யாதவராவ் அவர்களால் கொடுக்கப்பட்ட விபரம்.

| தேசத்தின் பெயர். | | சராசரி ஒவ்வொரு நபரும் உபயோகிக்கும் காகிதம். |
|---|---|---|
| அமெரிக்க ஐக்கிய தேசங்கள் | | 152 பவு |
| கிரேட்பிரிட்டன் | .... | 81 „ |
| பெல்ஜியம் | .... | 50 „ |
| ஜெர்மனி | .... | 48 „ |
| ஆஸ்திரேலியா | .... | 44 „ |
| பிரான்ஸ் | .... | 40 „ |
| ஆர்ஜன்டினா | .... | 31 „ |
| சிசிலி | .... | 26 „ |
| ஜப்பான் | .... | 18 „ |
| ப்ரேஸில் | .... | 13 „ |
| எகிப்து | .... | 5 „ |

இந்தியா ஒரு பவுண்டுக்கும் குறைவு.

மேலே கொடுத்த விவரங்களினின்றும் இந்தியாவின் ஸ்தானம் எங்கு இருக்கிறது என்பதை அறியலாம். ஒருசமயம் நம் நாட்டில் வழங்கும், பெருவாரியான எல்லா பஷைகளிலும் தினசரிப் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும், தோன்றினால் காகிதக் கைத்தொழிலில் பிரமிக்கத்தக்க வேறுபாடுகளை சீக்கிரம் உணரலாம். அதற்கான புதிய வசதிகளும் ஏற்படும் என்று எதிர்பார்க்கலாம்.

---

## பகவத் கைங்கரியம்

உத்தா மாயூர மென்னும் புண்ணிய க்ஷேத்திரத்தில், மயூரரூபமாயிருந்த அம்பாளுக்கு ஞானோபதேசம் செய்து நிஜ சரீரத்தைக் கொடுத்தவரும், நந்திபகவானுக்கும், ஸநகாதி முனிவர்களுக்கும் மேதா விலாஸத்தை அருளியவரும், புநித கங்கா தேவிக்கே பாப விமோசனம் செய்தவருமான, மாயூரம் வள்ளலார் கோயிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி பகவானுக்கு நிகழும் கார்த்திகைமீ 25ஆம் தேதி (10—12—42) குரு வார தினம் அபிஷேக ஆராதனை முதலியவை எப்போதும் போல விமரிசையாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது. பக்தர்கள் அவரவர்கள் உசிதப்படி உதவி புரிந்து ஒத்துழைக்கும்படி மாயவரம், வள்ளலார்கோயில், ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி மஹாபிஷேக கமிட்டியார் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

# மகந் தீபம்

**தமிழ்ப்படுத்தியவர்: ஸ்ரீ வே. சுப்ரமண்யம்**

மனிதன் என்று ஒளியின் தன்மையைக் கண்டானே அன்று முதலே அதன் உபயோகத்தையும் தன் அறிவின் வளர்ச்சியால் பெற முயன்ருன். நவநாகரிகப் பித்தனுய் புதுமையில் மோஹங் கொண்டு தான் கற்று உணர்ந்த கலை, விஞ்ஞானம் இவைகளைப் படிப்படியாய் அரைகுறையில் வைத்து விட்டு வாளாவிருக்கத் துணிந்தான். தாவர எண்ணெய்களாலான அகல் விளக்குகளை நீக்கிவிட்டு மண்ணெண்ணெய், கல்லெண்ணெய் (Petrol) மின்சாரம் (Electricity) இவைகளின் உதவியை நாகரிகத்தின் பேரால் விரும்பினுன். ஆனல் யுத்த அரக்கனின் ஆர்ப்பரிப்பால் வாழ்க்கைக்கு தற்சமயம் இன்றியமையாதவையான அரிசி முதல் மண்ணெண்ணெய், மின்சாரம் வரை எல்லா சாமான்களும் யுத்த தளவாட சாமான்கள் ஆயின. ஆதலால் பொதுமக்கள் உபயோகத்திற்கு இவைகள் சர்க்காரின் கட்டுப்பாட்டுடன்தான் (அதுவும் மிகவும் குறைவாக) உபயோகிக்க முடிகிறது.

ஆம்! மண்ணெண்ணெய் மின்சாரம் இவைகளெல்லாம் கிடைக்கும் வரை தான் உபயோகிக்க முடியும். பின்பு என்ன செய்வது? பசித்தவன் பழங் கணக்குப் பார்ப்பது போல் முன்னல் அரைகுறையாய் விட்டு வந்த தாவர எண்ணெய்களின் உபயோகத்தையே நாடவேண்டும். தாவர எண்ணெய்களுக்கு எவ்வித உற்பத்திக் குறைவும் ஏற்படாது. வேண்டிய அளவு பயிரிட்டுப் பலன் பெறலாம். இது சமயம் இந்தியாவில் அழிந்து போய்க்கொண்டிருக்கும் 7½-லக்ஷம் கிராமங்களுக்குப் புத்துயிர் அளிக்க முன் வந்திருக்கும் **அகில இந்திய கிராம கைத்தொழில் சங்கத்தார்** எந்த விதமான தாவர எண்ணெயையும் கொண்டு ஒளி தரக்கூடிய நவீன விளக்கு ஒன்றைச் செய்திருக்கிருர்கள். தற்போது அவர்கள் செய்திருக்கும் இத்தொண்டானது மிகவும் சிலாகிக்க வேண்டிய விஷயமாகும். இது எவ்விதம் செய்யப்பட்டிருக்கிறது; இதனல் நமக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் யாவை என்பதை அவசியம் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

சாதாரணமாய் நம் வீடுகளில் உபயோகிக்கும் மண்ணெண்ணெய் நாடாவின் வழியாக வெகு சுலபமாய் ஜ்வாலையை நோக்கிச் செல்கிறது. ஆனல் தாவர எண்ணெய்களுக்கு மண்ணெண்ணெயைக் காட்டிலும் அணுத்திரன் சக்தி (Thickness of the oil) அதிகமாக இருப்பதால் அவ்வளவு சுலபமாக நாடாவினுள் இயங்குவதில்லை. இதற்காக சாதாரண அகல் விளக்கு போல் ஜ்வாலையின் சமீபத்திலேயே எண்ணெயின் மட்டத்தை (level of oil) வைத்திருந்தால் ஹரிக்கேன், டேபிள் லாம்ப் (Table-lamp) இவைகளில் எண்ணெய் வெளியே தளும்பிச் சேதமாகும். மேலும் தொடர்ந்தாற்போல் ஜ்வாலை பிரகாசமாய் எரிவதற்குப் பிராணவாயுவைக் கொடுக்க அனுகூலமாயிருக்கும் விளக்குக்காயின் (Burner) உதவியையும் பெறமுடியாது. இக்கஷ்டத்தைப் போக்குவதான முறையைத்தான் ஷெ சங்கத்தைச் சார்ந்த ஸ்ரீஜத் ஸத்யன் அவர்கள் சென்ற இரண்டு மூன்று வருஷ முயற்சியின் பயனுய்க் கண்டு பிடித்தார்.

சகஜமாய் நம்மிடையே உபயோகத்திலிருக்கும் ஹரிக்கேன் விளக்கு

களில் தாவர எண்ணெயை உபயோகித்து விளக்கெரிக்க 'மகந்தீப'த்தின் சில முக்கிய பாகங்களுக்கு 4-அணுவும் அதைப் பொருத்தித் திருத்தி அமைக்கும் கூலிக்கு சுமார் அணு 12-ம் செலவு செய்து சுலபமாக ஹரிக்கேன் முதலான விளக்குகளை மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.

பொருளாதாரத் துறையில் இந்த விளக்கால் மிகுந்த நன்மை உண்டு. தற்சமயம் நாம் உபயோகித்து வரும் மண்ணெண்ணெய் மனித உழைப்பால் உற்பத்தி செய்யப்படுவதல்ல. இயற்கையிலேயே அது பூமியினுள் நிரம்பியிருக்கும் வஸ்து. இது பூமியினின்றும் யந்திர பலத்தால் ஒரு தனிப்பட்ட நபரால் எடுக்கப்பட்டு சுத்தம் செய்தபின் தன் வாழ்க்கை விமரிசைக்கு உகந்தபடி இஷ்டம்போல் அதன் விலையை உயர்த்தி மக்களின் பொருளை கொள்ளையடித்தும், தேசத்தின் பொருளாதார நிலை சீர்குலைந்தும் போகும்படி செய்கிறது.

தற்சமயம் மிகச்சிறிய கிராமத்தில் உழைத்து வாழும் கேவலம் எளிய சமுசாரி முதல் நாகரிகம் தாண்டவமாடும் நகர மாந்தர் ஈருகவுள்ள எல்லோராலும் நம் தேசத்தில் சுமார் 20-கோடி ரூபாய் மதிப்புள்ள 90-கோடி சேர் மண்ணெண்ணெய் உபயோகிக்கப்படுகிறது. ஆனால் இந்த 20-கோடி ரூபாயில் எளிய மக்களுக்கு எள்ளளவு கூடப் பயனில்லை. இந்த எண்ணெயை எரிக்க வெளிநாடுகளிலிருந்து விளக்குகளைத் தருவிக்கிறோம். ஏதேனும் ஒரு துறையில் நம் தேசம் உற்பத்தியில் ஈடுபட்டு ஏற்றுமதி செய்து பதிலுக்கு சரிசமானமாகப் பொருள்களை இறக்குமதி செய்தால் நாட்டின் பொருளாதார நிலை சீர்கெடாது. அதல்லாமல் எத்துறையிலும் நம் மக்கள் மிக மிகக் கீழ் நிலையில் நின்று மேன்மேலும் வெளி தேசங்களையே நம்பி அத்தேசத்தினரின் தொழிலுக்கு அடிமைகளாக விருந்தால் நம் தேசம் சீர்குலைந்து அழிந்து போயிருப்பது உண்மை. நமக்கு வெளிச்சம் அவசியந்தான். அதற்காக பிற நாட்டாரை எதிர்பார்த்தால் நம் தேசத்திற்குத் தீமையே ஒழிய ஒரு சிறிதும் நன்மை இல்லை.

நம் பாரத தேசம் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் உலகத்திலேயே பிரதான ஸ்தானம் வகிக்கின்றது.

வருஷா வருஷம் சுமார் 10-லக்ஷம் டன் கடலை, ஆமணக்கு, யாளி விதை முதலான எண்ணெய் வித்துக்களை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. மேற்படி விதைகள் மருத்துவம், ரசாயனம், ஆகாரம் முதலிய பல துறைகளில் வேண்டியிருப்பதால் விளக்கு எரிப்பதற்கு கிரயம் அதிகமாகும் என்று எண்ணலாம். வேப்பு, புன்னை, இலுப்பை, முந்திரி முதலான மரங்களின் விதைகளினின்றும் எடுக்கப்படும் எண்ணெய் சிறிய கிராமங்களில் சிலர்மட்டும் உபயோகிப்பதை விட பன்மடங்கு விருத்தி செய்து வியாபாரத்திற்கும் கொண்டுவர முடியும். அவ்விதம் செய்வதால் தேவையான தாவர எண்ணெய் நிரந்தரமாக கிடைப்பதோடன்றி, நாட்டின் பொருள் வளர்ச்சியும் அதிகப்படுகிறது.

இந்த நவீன தீபம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் எரியும்போது செலவாகும் மண்ணெண்ணெய் அளவைவிட 20% குறைவாகவே தாவர எண்ணெயை எரிக்கிறது. இதன்படி நம் தேசத்தில் விளக்கெரிக்க 72 கோடி சேர் தாவர எண்ணெய் இருந்தால் போதும். முதலில் சொல்லிய எண்ணெய்வித்துக்களின் மற்ற பல உபயோகங்களுக்கு எவ்வித தடையுமின்றி வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை நிறுத்தியாவது அல்லது 1½-லக்ஷம் ஏகர் நிலத்தைக்கொண்டு வீண்படாது சாகுபடி செய்தோமானால்

சுமார் 45 கோடி சேர் எண்ணெய் கிடைக்கும். மேலும் இம்மாதிரி செய்வதால் எண்ணெய் மூலம் 17 கோடி ரூபாயும், புண்ணாக்கு மூலம் 4 கோடி ரூபாயும், இதற்கு உழைக்கும் $1\frac{1}{2}$ லக்ஷம் குடிமக்களுக்கு $4\frac{1}{2}$ கோடி ரூபாயும் உள்நாட்டிலேயே எண்ணெயை அரைத்தெடுப்பதாலும், ஏற்றுமதித் தடை செய்வதாலும் $4\frac{1}{2}$-கோடி ரூபாயும் தேசத்திற்கு ஆதாயமாகும்.

எரிப்பதற்குத் தேவையான 27-கோடி சேர் எண்ணெயை புன்னை, இலுப்பை, வேம்பு, முந்திரி, எட்டி முதலான பல மரங்களின் விதைகளிலின்றும் எடுபடும் எண்ணெயை உபயோகித்துக் கொள்ளலாம். இதனால் மேலும் ஒரு லக்ஷம் குடும்பங்களுக்கு வேலையும் அதனால் 3-கோடி ரூபாய் வருமானமும் உண்டு. இதுதான் இப்படியென்றால் விளக்குகள் செய்ய

## சீர்திருத்திய புதிய விளக்கு

1 எண்ணெய்க் குழாய்


2 எண்ணெய் வாகி

3 நிரப்பும் குழாய்

4 எண்ணெய் செல்லுங் குழாய்

5 நாடா-பிடிப்பு

6 திருகு




படம் 1


வும் கண்ணாடி சிம்னிகள் செய்யவும் வெளி நாட்டாரை எதிர்பாராது நம் நாட்டுத் தொழிலாளிகளை முன்னுக்குக் கொண்டுவந்தால் 27½கோடி ரூபாய்க்கு குறையாமல் வேலையும் கிடைக்கும். வேலையில்லாத் திண்டாட்டமும் ஓரளவு ஒழியும்.

ஆனால் இப் புதிய விளக்கில் சுமார் 7-பைசா மண்ணெண்ணெய் எரியும் காலத்தில் 7½-பைசா கடலை, வேம்பு, புன்னை முதலிய எண்ணெய்களும், 9-பைசா ஆமணக்கு, யாளிவிதை, நல்லெண்ணெய் முதலிய எண்ணெய்கள் எரிக்கப்படுகின்றன.

மேலே சொன்ன இவ்வளவு ஏராளமான வருமானத்தையும், தேசத்தில் வேலையில்லா திண்டாட்டம் ஒழிவதையும் நம் மக்கள் கவனித்து இவ்விளக்கையும், தாவர எண்ணெயையும் உபயோகித்தால் தேசத்தின் பொருளாதார நிலை மிகவும் அபிவிர்த்தி அடையும். தேசமக்களும் நன்மை பெறுவார்கள்.

**விளக்கின் அமைப்பும் அதன் பாகங்களும் :—**

இத் தீபத்தின் பாகங்கள் சாதாரணமாய் கிராமத்திய கன்னார்களுங் (Village Tinkers) கூடச் சற்று கவ




**படம் 2**

1 படம் 1-ல் காணப்படும் எண்ணெய் வாகியின் அமைப்பு

2 குறுக்காகக் காணப்படும் தோற்றம்

3 எண்ணெய் வாகியின் அளவு விவரம்

ளித்தால் சுலபமாகச் செய்து கொள்ளும்படி அமைந்திருக்கின்றன. மண்ணெண்ணெய் விட்டு எரிக்கும் ஹரிக்கேன் விளக்குகளில் தாங்குதண்டுகளாக இரு புறங்களிலும் இருக்கும் குழாய்கள் 'விளக்குக்காயின்' (Burner) வழியாக ஜ்வாலைக்குத் தேவையான காற்றைக் கொடுத்து உதவுகிறது. ஆனால் இப் புதியவிளக்கில் அந்தத் தண்டுகளில் ஒன்றை எடுத்துவிட்டு அதற்கு பதிலாக அந்த இடத்தில் எண்ணெய் நிரப்பி வைக்கக் குழாய் ஒன்று இணைக்கப்பட்டு இருக்கிறது. முன்பு எண்ணெய் நிரப்பி வைத்திருந்த பாத்திரம் இப்பொழுது காற்றுவாகியாக (Air Chamber) உபயோகிக்கப்படுகிறது.

**மகந் தீபம்**

1 எண்ணெய்க்-குழாய்

2 எண்ணெய் வாகி


3 நிரப்பும் குழாய்

4 எண்ணெய் செல்லுங் குழாய்

5 நாடா பிடிப்பு


6 திருகு

7 தாங்குதண்டு




படம் 3

மேலும் மிகவும் குறுகிய வாயைப் பெற்றுள்ள ஒரு கண்ணாடி சீசாவை எண்ணெயால் நிரப்பி வைத்து தலை கீழாகக் கவிழ்த்தால் எண்ணெய் சொட்டு சொட்டாகத்தான் கீழே விழும். அந்த முறையைத் தழுவித்தான் இந்த எண்ணெய்க் குழாய் (Oil Reservoir) இணைக்கப்பட்டிருக்கிறது. அதன் துவாரத்தின் கீழ் நிரந்தரமாகவும் நிதானமாகவும் எண்ணெயை நாடாவுக்கு வாங்கி அனுப்ப Regulator என்ற ஒரு பாத்திரமும் அதனின்றும் நாடாவுக்கு எண்ணெய் செல்ல ஒரு குழாயும் (Feeder) கீழே உள்ள காற்று வாகியுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. இதுபோக அடிக்கடி எண்ணெய் ஆனவுடன் எண்ணெய்க் குழாயில் நிரப்ப எண்ணெய் நிரப்பும் குழாய் (Oil Filler) ஒன்று Regulator மீது எண்ணெய்க் குழாயின் அருகிலேயே இணைக்கப்பட்டிருக்கிறது. இது எண்ணெய் நிரப்புவது மட்டுமில்லாது ஜ்வாலை எரிவதற்கும் தகுந்தாற் போல் Regulator-ல் எண்ணெய் மட்டத்தை ஒரே நிதானமாக வைக்க காற்றுப் புகுவதற்கு வசதியாகவும் இருக்கிறது. பழைய விளக்குகளை தாவர எண்ணெய் போட்டு எரிக்கத் திருத்திய பின்பு அதில் நாடாவைப் பிடித்துக்கொள்ள இருக்கும் குழாய் விளக்குக்காயின் கீழேயே காற்று வாகியினுள் செங்குத்தாக இருக்கிறது. ஆனால் இப் புதிய விளக்கில் அப் பிடிப்பு (Wick Holder) அரை வட்ட




படம் 4

1 படம் 3-ல் காணப்படும் எண்ணெய் வாகியின் அமைப்பு
2 குறுக்காகக் காணப்படும் தோற்றம்
3 எண்ணெய் வாகியின் அளவு விவரம்

வடிவமாக கிண்ணம் போல் அமைக்கப்பட்டு நாடாவை ஏற்றி இறக்க உள்ள திருகு ஒரு முனையுடன் Regulator-ன் சமீபத்தில் இணைக்கப்பட்டிருக்கிறது. திருத்தியமைக்கப்பட்ட விளக்கிலோ என்றால் திருகு விளக்குக்காயின் கீழேயே யிருக்கிறது. ஆதலால் எண்ணெய் சிறிது சிறிது கசியும். இதைத் தவிர்க்க திருகின்மீது கம்பி போன்ற நல்ல Washer ஒன்று அமைத்து அதன்மீது தகட்டால் பற்ற வைத்து விட்டால் போதும். மேலும் புதிய விளக்கில் உள்ள Burner-ல் எரிவதற்குத் தேவையானதுபோக மீதி எண்ணெய் இருப்பதற்கு இடமிருக்கிறது. மண்ணெண்ணெய் இது போல் ஜ்வாலை சமீபத்தில் இருந்தால் தீப்பிடித்து விடும். ஆனால் இது தாவர எண்ணெயாக இருப்பதால் நாடா கருகி எரிந்து வீண் போகாது செய்கிறது.

**உபயோகிக்கும் விதம் :—**

எண்ணெய் தூசு, துரும்பு இல்லாது சுத்தமாக இருக்கவேண்டும் ; உறைந்து போகும் தன்மையுள்ள தேங்காயெண்ணெய் முதலியவற்றை உபயோகிக்கக் கூடாது. எண்ணெய் நிரப்பும் குழாய் (Filler) வழியாக மெதுவாக எண்ணெயை ஊற்ற வேண்டும். நாடாவை, கருகிய பாகத்தை அன்றாடம் கத்தரித்துவிட்டு, சுத்தமாகவும், வேண்டிய அளவுக்கு திருகினால் உயர்த்தியோ, தாழ்த்தியோ உபயோகிக்க வேண்டும். மண்ணெண்ணெயைப்போல் தாவர எண்ணெயில் உள்ள திரி சீக்கிரம் தீப் பட்டவுடன் பற்றிக் கொள்ளாது. ஆதலால் சாவதானமாய் நாடா முனையின் ஒரு பாகத்தில் ஜ்வாலையைப் பற்ற வைக்க வேண்டும்.

விளக்குகளை கையில் எடுத்துச் செல்லும்போது அனுவசியமாகக் குலுக்கக் கூடாது. எந்த காற்றிலும் இவ் விளக்கு ஹரிக்கேன் விளக்கின் திறமைக்குத் குறையாது உழைக்கும். இவ்விளக்கு, இதன் பாகங்கள் எல்லாம் நன்கு பரீக்ஷிக்கப்பட்டு காந்திஜி அவர்களின் நன் மதிப்பும் பெற்றுள்ளது.



# தீபாவளி : : சில கருத்துக்கள்

**ராவ்பகதூர் டாக்டர். டி. எஸ். திருமூர்த்தி**

**சாமானியர்களுக்குப் புலப்படாத பொருளும் அழகும், இன்பமும் கலைஞனின் அகக்கண்ணுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாகக் காட்சியளிக்கின்றன. எல்லோருக்கும் புறக்கண், அகக்கண் உண்டு—பண்டிகைகளின் தத்துவார்த்தத்தையும் அகக்கண் கொண்டே பார்க்கவேண்டும்.**

'தீபாவளி' என்ற பண்டிகை எதற்காகக் கொண்டாடுகிறோம் என்பதற்கு பௌராணிகர்கள் நமக்குச் சொல்லிக் கொண்டு வரும் கதையும், அந்த தினத்தில் பண்டிகையை ஒட்டி என்ன என்ன காரியங்களை ஜனங்கள் செய்கிறார்கள் என்பதையும் நான் இங்கே வளர்த்தி எழுத வேண்டியது இல்லை. எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இருப்பினும் இரண்டொரு கருத்துக்களை வெளியிட விரும்பி இக்கட்டுரையை ஆரம்பித்தேன்.

போன மாத 'கலைமகள்' இதழில் நமது ராஜாஜி அவர்கள் உத்தர ராம சரிதத்தின் உட்பொருள் என்ற விஷயம் பற்றி ஒரு அழகிய கட்டுரை எழுதியிருக்கிறார். ஊர்வம்பைக் கேட்டு பெண்டாட்டியை ஓட்டிவிடுவது அதன் கருத்தல்ல; ஸ்ரீராமன் இராவணனை சம்ஹாரம் செய்தானே தவிர, 'ஊர்வம்பு' என்ற ராக்ஷசனைக் கொல்லாமல் விட்டு விட்டான்; இந்த பொல்லாத அரக்கனிடமிருந்து நம்மை காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற உண்மையை வெளியிடவே இந்தக் காவியம் வரையப்பட்டிருக்கிறது என்று கண்டிருக்கிறார்.

காவியங்களின் உட்கருத்தை அறிந்து கொள்வதே அறிவாளிகளின் ஆராய்ச்சியின் நோக்கம். 'காவிய ஆராய்ச்சிக் கண்' படைத்தவர்கள் சிலரே. இயற்கை சிருஷ்டியையும், மானிட சிருஷ்டியையும் நாம் தினமும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். விசேஷ உணர்ச்சிகள் ஏற்படுவதில்லை. ஆனால், ஒரு கவிஞன் அவைகளில் உள்ள அழகுகளையும், கற்பித்த அழகுகளையும், அற்புதக் காட்சியாகவோ, ஆனந்தக் கனவாகவோ தன் கவியிலும், காவியத்திலும் காட்டும்போதுதான் நாம் அந்த சிருஷ்டிகளைக் கண்டு களிக்கிறோம்; அப்பொழுதுதான் கவியின் மனோபாவத்தை உணர்கிறோம்; நம்மிடத்திலும் சௌந்தர்ய உணர்ச்சி பிறக்கிறது.

உண்மைக் கவிக்கும், காவியத்திற்கும் 'இதம்' அல்லது 'நல்லின்பம்' உண்டாக்குவதே நோக்கம். "காவிய மாளிகை—சில குறிப்புகள்" என்பது பற்றி ஸ்ரீமான் பி. ஸ்ரீ ஆசாரியார் ஆனந்த விகடன் போனவருஷ தீபாவளி மலரில் எழுதியிருக்கிறார். அந்த அருமையான கட்டுரையை, இலக்கியச் சுவையை அநுபவிக்கப் பிரியப்படுகிறவர்கள் கட்டாயமாக வாசிக்க வேண்டும். உட்பொருள் தெரிந்தால் ஒழிய நல்லின்பம் பிறக்காது; உணர்ச்சி ஜனிக்காது. சங்கீதத்தின் நோக்கமும் நல்லின்பமே. சித்திரக் கலை, சிற்பக்கலை இவைகளின் பயனும் நவரச உணர்ச்சியே.

இதே மாதிரி நம்முடைய திருவிழாக்களும், பண்டிகைகளும் இன்பத்தையும் ஆனந்தத்தையும் அநுபவிக்கவே கற்பித்தவையாக இருக்க வேண்டும். ஆனால், அவைகளின் நுண்பொருளை அறியாவிட்டால் அவைகளைக் கொண்டாடுவதினின்றும் நாம் அடையும்

இன்பம் மிகவும் சிறிது, நிலைக்காதது. ஐம்புலன் உணர்ச்சியில் பெறும் இன்பம் சிற்றின்பமே! அளவிலும் சிறியது; காலத்திலும் சிறியது. புலன்களால் அநுபவிக்கும் இன்பத்தைக் கானல் நீருக்குச் சமானமாக சொல்வது மரபு; பொய்த் தோற்றம்; நிலையற்றது; கனவு!

“ நாலேந்து கேள்வி நாகரார், புலன் நோக்கலுற்றார் ” என்று கம்பர் பாடியிருக்கிறார். பாமரர்கள் காவியத்தில் சிற்றின்பத்தையே காண்பார்கள்; அறிவாளிகள் அவைகளில் நுண்பொருளைக் கிரகித்து பேரின்பத்தை நுகர்வார்கள் என்பது அவர் கருத்து. சாமானியர்களுக்குப் புலப்படாத பொருளும், அழகும், இன்பமும் கலைஞனின் அகக்கண்ணுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாகக் காட்சியளிக்கின்றன. எல்லோருக்கும் புறக்கண் அகக்கண் உண்டு—பண்டிகைகளின் தத்துவார்த்தத்தையும் அகக்கண் கொண்டே பார்க்க வேண்டும்.

எப்படிச் சிறந்த கலைகள் எல்லாம் பேரின்பத்தைப் புகட்டி, வாழ்க்கைப் போரிலும், ஜன சமூக வாழ்க்கைப் போரிலும் ஈடுபடுவதற்கு வேண்டிய அறிவும், ஆற்றலும், தைரியமும் ஊட்டவல்ல விசேஷ சக்திகளைப் பிறப்பிக்கின்றனவோ, அதேமாதிரி நாம் கொண்டாடும் பண்டிகைகளும் இப்படிப்பட்ட சக்தியை ஜனிக்கும் கருத்துடன் ஏற்பட்டு இருக்கலாமா என்பதை கொஞ்சம் ஆராய்வோம்.

எப்படி நாம் ஒரு கவியில் சொற்செல்வத்தையும், பொருள் அழகையும், உள்ளுரையையும் ஆராய்ந்து அநுபவிக்கிறோமோ, அது போலவே மற்ற சில விஷயங்களிலும் நாம் பரிசிலனை செய்து சுவை இருப்பின் அதை நுகரலாம். ஒரு கவிதைக்கு சொற்களால் உடம்பும், பொருள் அழகினால் உள்ளமும், நுண் பொருளால் உயிரும் கவியின் மேதா விலாசத்தால், மனோபாவத்தால், அமைக்கப்படுகிறது. அது போலவே பண்டிகை கொண்டாடும் பல முறைகள் அதன் ஸ்தூல உருவம், பண்டிகையின் காரணம் அதன் அழகு, பண்டிகையின் தத்துவார்த்தமே அதன் உயிர்.

கலைஞன் கண்ணுடன் பார்க்கும் போது, ‘ தீபாவளி ’ எல்லோரும் தினம் காணும் ஒரு இயற்கை நிகழ்ச்சியை பாவனா ரூபமாகக் கற்பிக்கப்பட்ட ஒரு ஆனந்த அநுபவமாகத் தோன்றுகிறது. பூரண சந்திரன் தினசரி தேய்ந்து கொண்டே வந்து மக்களின் மகிழ்ச்சியைக் குறைக்கிறான்; இருள் என்னும் அரக்கனின் கோர அரசாட்சி அதிகரித்துக்கொண்டே போகிறது; கிருஷ்ண பக்ஷம் அமாவாசையில் முடிகிறது; இருட்டரக்கனின் கொடுமை சம்பூர்ணம்; மக்கள் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு; அவர்கள் கடவுளைப் பிரார்த்திக்கிறார்கள்; கடவுள் சூரிய பகவானைத் தூதனாக துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனத்திற்காக அனுப்புகிறார். அவன் தன் கிரணங்களாகிய அஸ்திர சஸ்திரங்களினால் அந்த அரக்கனையும், அவன் படைகளையும் பூண்டோடு அழித்துவிடுகிறான். சூரிய பகவானின் கருணைப் பிரவாகத்தால் உயிர்களெல்லாம் மறுபிறப்பு அடைந்ததுபோல் உயிர்த்து எழுகின்றன. எல்லா ஜீவன்களும் சூரிய ஒளியில் மூழ்கித் திளைத்துக் களித்து ஆனந்திக்கின்றன. தீபாவளியில் நாம் செய்யும் காரியங்களின் பாவம் இந்த இயற்கை நிகழ்ச்சியின் இன்பத்தை வெளிப்படுத்தவே என்கிறான் கலைஞன்.

தத்துவ நூல் ஆராய்ச்சியில் தேர்ந்தவர் தீபாவளியில் ஒரு தத்துவார்த்தத்தைக் காண்கிறார். அந்தப் புனித தினத்தின் கொண்டாட்டத்தின் நோக்கம்—“ ஒவ்வொரு மனிதனும் தன்னைத் தூய்மையாக்கிக்கொள்ள

வேண்டிய சக்தி தன்னிடமேதான் இருக்கிறது; தன் முன்னேற்றத்தையும், தன் ஆத்ம லாபத்தையும் தானேதான் தேடிக்கொள்ள வேண்டும்; இதுவே மானிடனைப் பிறந்ததின் திருஷ்டியாக இருக்க வேண்டும்; அத்யாவசியமான இந்த விஷயத்தைத்தான் மனுஷ்யன் மறந்து விடுகிறான்; ஆகையால் இந்தத் தத்துவத்தைத் திரும்பத்திரும்ப, வருஷா வருஷம் ஒரு பண்டிகை மூலமாகத் தெரிந்து கொள்ளட்டும் என்று ஒரு மகரிஷி தீபாவளி என்ற பண்டிகையை ஆரம்பிக்க ஏற்பாடு செய்தார்" என்று அவர் அபிப்பிராயப்படுகிறார். அறியாமை, அஞ்ஞானம் ஆகிய இருளைப் போக்கி, அறிவு, ஞானம் ஆகிய தீபங்களை, ஞானபானுவை ஏற்றிவைப்பதற்குத்தான் ஏற்பட்டிருக்கிறது தீபாவளிப் பண்டிகை. புற சுத்தத்திற்காக அப்யங்கனம், புது ஆடை; வெளி அழகுக்கு தீபங்கள்; படாஸ், மத்தாப்பு, வெடி, வாணங்கள் வெறும் வேடிக்கைக்காக மாத்திரம் அல்ல; காமம், குரோதம், மதம், மோகம், மாத்ஸரியம் ஆகிய இருள் அசுரர்களை அறிவு, ஞானம் என்ற கருவிகளால் கொன்று தொலைத்து, மனம், வாக்கு, காயசித்தி என்ற வெற்றிக் கொடியை நாட்டவேண்டும் என்பது கருத்து. அகத்தின் அழகுக்குப் புறத்தின் அழகு அனுசரணை செய்கிறது. அவ்வளவு தான்!

"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல; நெஞ்சத்து
நல்லாம் யாம் என்னும் நடுவுநிலைமையால்
கல்வி அழகே அழகு".

அறிவும், ஞானமுந்தான் மனதை அழகு செய்ய முடியும்.

எப்படி பஞ்சேந்திரியப் போரில் ஒருவன் வெற்றி பெறலாமோ, அதே மாதிரிதான் சமூகப் போரிலும் என்பதையும் தீபாவளி எடுத்துக் காட்டுகிறது. சமூக சிக்கல்களாகிய அரக்கர்களை எல்லாம் வென்றாலன்றி விடுதலை இல்லை; சுதந்திரம் இல்லை; சுயராஜ்யம் இல்லை; மனோராஜ்யத்தால் பிரயோஜனம் இல்லை; ஒன்று பட்டால்தான் வாழ்வு என்ற நீதிகளையும் உணர்த்துவது தீபாவளிப் பண்டிகையின் உட்கருத்தாக இருக்கிறது என்பது உண்மை. "எப்பொருள் யார் யார் வாய்கேட்பினும், அப்பொருளில் மெய்ப்பொருள் காண்பது அறிவு".

தீபாவளியின் கொண்டாட்டத்தில் கலக்காதவர்கள் நம் நாட்டில் இல்லை. ஆங்கில தேசத்து மில் முதலாளிகள் ஆடைகளை மில்லில் நெய்து கப்பல் கப்பலாக அனுப்புகிறார்கள்; சீனர்களும், ஜப்பானியரும் படாஸ், மத்தாப்பு, வெடி முதலானவைகளையும், ஜர்மானியர் உயர்ந்த கலர் மத்தாப்புகள், நக்ஷத்திர மத்தாப்புகள், வாணங்கள், பொய்த்துப்பாக்கிகள் முதலானவைகள் ஏராளமாகச் செய்து நமக்குச் சந்தோஷத்தைக் கொடுத்துத் தங்களுக்கு ஐஸ்வரியமும் தேடிக்கொள்ளுகிறார்கள். இப்படி நம் தீபாவளியில் மற்ற தேசத்தினரும் கூடக் கலந்து கொள்ளுகிறார்கள்.

"ஒன்று பட்டால் உண்டு
வாழ்வே— நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும்
தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்;
இந்த
ஞானம் வந்தால், பின் நமக்கு
எது வேண்டும்?"
(சுப்பிரமணிய பாரதியார்).

# அவர் கற்ற படிப்பினை

பி. எஸ். சுப்ரமண்யன், கரூர்.

"சரி சரி, வேகமாக ஓட்டு. நாலு அணாவே தரேன். நாளை எனக்கு ஆபிஸுக்குப் போயாகணும். இந்த ட்ரேயின் தப்பினா எனக்கு வேறு வழியில்லை!" என்று அரை மனத்துடன் சலித்துக்கொண்டு சொன்னார்...ஆனால் ஸ்டேஷனுக்கு வந்ததும் அவர் என்ன செய்தார்? அவன், அந்த ஏழை வண்டிக்காரன், என்ன செய்தான்?......

"ஏன் அப்பா, இங்கிருந்து ரெயில்வே ஸ்டேஷனுக்கு என்ன வாடகை?"

"நாலணாவுங்க"

"என்ன! நாலணாவா? ஆசாமி ஊருக்குப் புதுசுன்னு நெனச்சியோ!"

"அப்படியெல்லாம் ஒன்றும் இல்லீங்க. வழக்கமா மூணணாத்தான் ஏற்பட்டது. இப்ப ராத்திரியிலே யாரு நாலணாவுக்குக் குறைஞ்சு வரேங்கிறான்."

"அதெல்லாம் சரிதான். மூணணாவின்னா வண்டியைக் கட்டு"

"என்னங்க அப்படிக் கண்டிப்பாய்ச் சொல்லிப்பிட்டீங்க. வண்டியிலே ஏறிக்கிங்க சாமி, பின்னடி இஷ்டப்பட்டதைக் கொடுக்கலாம். ரெயிலுக்கு நேரமாயிடப் போவுது."

சங்குவையரும் வண்டியிலேறி உட்கார்ந்து கொண்டார். வண்டியும் புறப்பட்டது.

"சாமி, ஏழை எளியவன் வவுத்திலே அடிச்சிட்டா என்ன பண்றதுங்க. விலை வாசிகளெல்லாம் ஒட்டிக்கிரெட்டி ஏறிக்கிடக்குது. உங்களுக்குத் தெரியாததுங்களா! வண்டியும் மாடும் என்ன கிரயம் ஆகுதுங்க தெரியுமா?" என்று மௌனமாயிருந்த சங்குவையரை இழுத்துவைத்து வலியப் பேச ஆரம்பித்தான் பொன்னன்.

"சரிதாண்டா, வண்டிமாடு கிரயத்தை என்னிடம் வாங்கலாம்னு நினைக்கிறயா!" என்று கொஞ்சம் உரத்த குரலில் பேசினார் சங்குவையர். அவரது குரலில் உத்தியோக தோரணை பிரதிபலித்தது. "அப்படியெல்லாம் இல்லீங்க. கூலியிலே நிதானம் வேண்டாங்களா? டேஷன் இங்கிருந்து சரியா மூணு கல்லு இருக்குதுங்க" என்று கொஞ்சம் பணிவுடனேயே பதிலளித்தான் பொன்னன்.

"மூணு கல்லா? நன்னாய்ச் சொன்னே போ. இந்தப் பாலத்தைத் தாண்டினா அந்தாண்டை ஊரு. ஜாஸ்தியாப் போனா ஒரு மைல் இருக்கும்."

"ஹூம்— ஒரு மைலுக்கும் மூணு மைலுக்கும் எவ்வளவு வித்தியாசம்— சரி, எவ்வளவு இருந்தாத்தான் என்ன சாமி? வழக்கமா ஏற்பட்ட கூலியைக் குறைக்கலாங்களா?...........ஏன் சாமி; நீங்க யாரு வூட்டுக்கு வந்தீங்க?" என்று வேறு விஷயத்தில் பேச்சைத் திருப்பினான் பொன்னன்.

"மணியகார ஐயா இருக்காரோ இல்லியோ, அவுங்க வீட்டுக்கு மேற்காலே இரண்டு வீடு தள்ளி...."

"சரிதான், ராமசந்திர ஐயரு வூட்டுக்கா? நானும் அப்படித்தான் நினைச்சேன்."

"ஆமாம். என் மருமானை அவருக்குக் கட்டிக் கொடுத்திருக்கு" என்று

அவனுக்குப் புரியும் பாஷையிலேயே பேசினர்.

"சரிதாங்க. அப்படியின்னு அந்த ஐயா சம்சாரம் உங்க தங்கச்சி மகளுங்களா? உங்க ஊரு எதுவோ?"

"எங்க ஊர் தஞ்சாவூர். நானே ஆபீஸிற்குப் போயாகணும். அதுக்காகத்தான் இப்ப அவசரமா ராத்திரியிலேயே போறேன். தூக்கத்தைப் பார்த்தால் முடியுமா அப்பா, வேலைக்குப் போக வேண்டாமா?" என்று கொஞ்சம் சரளமாகவே பேச ஆரம்பித்தார் சங்குவையர்.

"ஆமாம் சுவரு இருந்து தானே சித்திரம் எழுதணுங்க. தஞ்சாவூரிலே என்ன வேலையில் இருக்கீங்களோ?"

இம்மாதிரியாக அவர்கள் சம்பாஷணை மேலே மேலே போய்க் கொண்டிருந்தது.

கொஞ்சம் அந்தஸ்தும் கௌரவமும் உள்ள பெரிய மனுஷ்யர்கள் ஏழை பாழைகளிடம் சரளமாக அவர்கள் மனதை விட்டுப் பேசுவதனால் ஏற்படும் சம்பாஷணையின் போக்கே தனி என்று சொல்லலாம். இதை நாம் அநேக இடங்களில் அநுபவ பூர்வமாகப் பார்க்கலாம்.

"போஸ்டாபீஸிலே வேலை. கவர்மெண்டு வேலை பாரு, டயப்படி போயாகணும். வண்டியைச் சீக்கிரம் ஓட்டு. ஐந்து நிமிஷம்தான் இருக்கு. இந்த டிரையின் தப்பினா, அப்புறம் நாளை எட்டு மணிக்குத்தான் அடுத்த டிரையின்!" என்று துரிதப் படுத்தினர்.

"மாடு பேஷான மாடுங்க. முக்கா நூறுக்கு மேலே ஆவுது. இதோ பாருங்க ஒரு நிமிஷத்திலே டேஷனுக்கு கொண்டு விட்டுடரேன். கூலியை மட்டும் குறைச்சுடாதீங்க. உங்களுக்காகத் தான் இந்த ராவிலே வண்டியைக் கட்டினேன். வேறு யாராயிருந்தாலும்...."

"கூலியைக் குறைக்கிறதா? அதுதான் அப்பவே மூணணுன்னு சொல்லி விட்டேனேடா"

"சாமி அப்படிச் சொல்லப்படாதுங்க சமயா சமயம்னு ஒரு அணாவைப் பார்க்கப்படாதுதான். எஜமாங்கள்ளாம் இப்படி கணக்குப் பார்த்தா, ஏழை பாழை எப்படி வயித்தைக் கழுவறதுங்க. ஒரு அணா காசு சும்மா கொடுத்தாலும் போச்சு" என்று கெஞ்சாத தோஷமாய்ப் பதிலளித்தான்.

"சரி, சரி. வேகமாக ஓட்டு. நானு அணாவே தரேன். நாளை எனக்கு ஆபீஸுக்குப் போயாகணும். இந்த டிரெயின் தப்பினா எனக்கு வேறு வழியில்லையே." என்று அரைமனதுடன் சலித்துக்கொண்டு ஒப்புக் கொண்டார்.

பொன்னன் விசையாக வண்டியை ஓட்ட ஆரம்பித்தான். வண்டி ஷ்டேஷனை அடைவதற்கும் ரெயில் வருவதற்கும் சரியாக இருந்தது. சங்குவையர் அவசர அவசரமாகக் கீழே இறங்கினர். அவரது மணிபர்ஸில் இருந்த மூன்றணாவைப் பொன்னனிடம் கொடுத்துவிட்டு "பாக்கி சில்லரை இல்லை. டிக்கெட் வாங்கிவிட்டு இன்னும் ஒரு அணாத் தருகிறேன்," என்று சொல்லிவிட்டு விசையாக ஓடினர்.

டிக்கெட் வாங்கியது தான் தாமதம். முதல் மணி அடித்தாய்விட்டது. பொன்னனுக்கு ஒரு அணா கொடுக்க வேண்டிய ஞாபகம் வந்தது. ரெயில் அங்கு இன்னும் ஐந்து நிமிஷம் நிற்குமென்று அவருக்குத் நன்ருய்த் தெரியும். பொன்னனிடம் ஒரு அணா சில்லரையைக் கொடுத்து விட்டுப் போவதற்குள் நாழிகையாய்விடாது.

ஆனால் அவரது மனக்குரங்கு 'மூணணு வாடகைக் போருதாடா? ஒரு அணு அதிகம்தான் என்று தோன்று கிறது. ஆகையால் ஞாபகமறதி யுள்ளவன் போல் போய்விட்டால் என்ன' என்று அவரைத் தூண்டியது. அதேசமயம் அவரது மனச் சாட்சியோ 'வேண்டாம், பாவம். கூலிக்காரன் தலையில் கையை வைக்காதே. இதுவா மனுஷத்தன்மை' என்று சுட்டிக் காட்டி எளனம் செய்தது. அவரது மனச்சாட்சிக்கும், மனக் குரங்கிற்கும் ஒரு சிறிய போராட்டம் நடந்தது கொஞ்ச நேரம். கடைசியில் அவரது மனக்குரங்கே வெற்றி பெற்றது...

சங்குவையர் கூட்டத்திலுள் மறைந்து சென்று ரெயிலேறி உட் கார்ந்து கொண்டுவிட்டார். அங்கு மறுபடியும் அவரது மனச்சாட்சி அவரைத் துன்புறுத்த ஆரம்பித்தது. 'சீ! என்ன காரியம் செய்துவிட்டாய்! ஒரு அணக் காசுக்காக எவ்வளவு கேவலமாக நடந்துகொண்டு விட்டாய்? உன் வேலை என்ன? சம்பளம் எவ்வளவு? அப்படியிருந்தும் ஒரு அணு விற்காக நீயே உன்னைக் கேவலப் படுத்திக்கொண்டுவிட்டாய்' என்று கேலி யாக எதோ ஒரு உருவம் அவர் முன் தோன்றி சொல்லுவது போலிருந்தது.

'ஆம், வாஸ்தவம்தான். நம்மைப் போன்றவர்களுக்கு ஒரு அணு அற்ப மாகத் தோன்றுகிறது. ஆனால் அதே ஒரு அணு எழை மக்களுக்கு ஒரு நாளைக்கு ஆகாரமாக அல்லவா ஆகின்றது?........இறங்கிப் போய் ஒரு அணவைக் கொடுத்துவிட்டு வரலா மென்றால், நாழிகையாய்விடும்! என்ன செய்கிறது?' என்று யோசித்த வண்ணம் அமர்ந்திருந்தார். அவரது மனத்தோணியை அநேக எண்ண அலைகள் வந்து மோதின.

அப்பொழுது அவ்விடத்தில் பொன் னன் திடீரென்று அவர் முன் தோன்றி, ஒரு கும்பிடு போட்டுவிட்டு, "குடையை வண்டியிலேயே வச்சிட்டு வந்திட்டீங்களே, இந்தாங்க குடை" என்று குடையை அவரிடம் கொடுத்துவிட்டு ஒரு அணு பாக்கியை எதிர்பார்த்து நின்றான்.

சங்குவையர் தன்னை ஒரு அணுவிற் காக எமாற்றிவிட்டதாக அவன் கொஞ் சமும் சந்தேகப்பட வில்லை. குடைக் காகத் திரும்பி வருவார் என்று அவரை எதிர்பார்த்துக் கொண்டே வண்டியின ருகில் நின்று கொண்டிருந்தான் அவன். வெகு நேரமாகியும் அவர் வராததைக் கண்டு, குடையை எடுத்துக் கொண்டு டிக்கட்கொடுக்கும் இடத்திற்குப்போய் அங்கு அவரைத் தேடினன். அங்கு அவர் இல்லை என்று தெரிந்ததும் பிளாட் பாரத்திற்கே அவரைத் தேடிக் கொண்டு வந்து விட்டான்.

சங்குவையருக்குச் சந்தோஷம் ஒரு புறம். தாம்செய்த காரியத்தை நினைத்து அவமானம் ஒரு புறம். "உன்னைப் பார்த்தா பரிதாபமாயிருக்கு, இந்தா இரண்டணு, வைத்துக்கொள்" என்று கூறி, பொன்னனிடம் ஒரு இரண்டணு நாணயத்தை எடுத்துக் கொடுத்தார்!



# தர்மம்

கு. நா. சுப்ரமண்யம், சிதம்பரம்.

நான் மறுபடியும் மறந்து போய்விடாமல் கேட்டேன்.. "நீராவது தர்மம் செய்யவாவது ஐயா, என்னால் நம்ப முடியவில்லையே! பிச்சைக்காரர்களைக் கண்டால் கார்ப்பொரேஷனுக்கும், போலீஸுக்கும் மனு எழுதிப் போடவேணும் என்று சொல்கிறவரல்லவா நீங்கள்!" என்று. தயங்கித் தயங்கியே நண்பர் விஷயத்தைச் சொன்னார்.

"இது என்ன ஐயா இது? தர்மம் ஆறணா என்று கணக்கெழுதி வைத்திருக்கிறீரே? எத்தனை நாளாய் இந்தமாதிரிப் புண்ணியம் சம்பாதிக்க ஆரம்பித்திருக்கிறீர்?" என்று புஸ்தக வியாபாரி விசுவநாதனை ஆச்சரியத்துடன் கேட்டேன் நான்.

"அடாடா! அது உங்கள் கண்ணில் படாமல் இருக்க வேணும் என்றல்லவா வைத்திருந்தேன்........ தேடிப் பிடித்துப் பார்த்து விட்டீரா!" விசுவநாதன் குரலில் ஏதோ அசட்டுக்காரியம் செய்துவிட்டு மாட்டிக் கொண்டவர் போல ஒரு **பா**வம் தொனித்தது.

"இப்பவெல்லாம் ரகசியமாய் புண்ணியம் சம்பாதிக்கிற காரியத்திலேயே ஈடுபட்டிருக்காப்பலேயிருக்கு! இதென்ன கோலம் இது? இருக்கிறதுக்கு வழியைக் காணவில்லை, போறதுக்கு வழி பார்க்க ஆரம்பித்து விட்டீர்?"

"இல்லை...."

"விஷயத்தைச் சொல்லய்யா என்றால் என்னவோ......."

"அப்புறம் தனியாயிருக்கும்போது சொல்லுகிறேன்.........இதோ யாரோ வருகிறார்கள், அவர்கள் போனதும் சொல்லுகிறேன்" என்றார் விசுவநாதன்.

வந்தவர்கள் ஆரம்பப் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள். அவர்களும் புஸ்தக வியாபாரியும், புஸ்தகங்கள் விற்பனை விஷயமாக வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். நான் அவர்களுடைய சம்பாஷணையைக் காதுகொடுத்து கவனிக்கவில்லை. ஈஸிசேரில் சாய்ந்தபடியே ஒரு புஸ்தகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவர்களுடைய சம்பாஷணை கேவலம் ரூபா அணா பைசாவைப் பற்றித்தான். விசுவநாதன் அந்த உபாத்தியாயர்கள் மூலம் விற்ற புஸ்தகங்களுக்கு அவர்களுக்கு ஏதோ சதவிகிதம் கமிஷன் தருவதாக ஒப்புக்கொண்டிருந்தார் போலிருக்கிறது. அதைப்பற்றிப் பைசா பைசாவாகப் பேரம் நடந்து கொண்டிருந்தது.

ஒரு வழியாக பேச்சைப் முடித்துக் கொண்டு அவர்களுக்குச் சேர வேண்டிய 'ஸாடேதீன்' அணா கமிஷனைப் பெற்றுக்கொண்டு அந்த அறிஞர்கள் போனபின் நான் விசுவநாதனைப் பார்த்து "என்ன ஐயா, இவர்களுக்கு வேறே கமிஷனா?" என்று கேட்டேன்.

"அதை ஏன் கேட்கிறீர், போங்கோ! படித்தவன் படிக்காதவன் எல்லாருமா எதுக் கெடுத்தாலும் நம்மைப் பிடுங்கித் திங்கறதுலேதான் இருக்கான்" என்று விசுவநாதன் குறைப்பட்டுக்கொண்டார். அப்புறம் சற்று நேரம் மௌன

மாக இருந்துவிட்டு "சாமி, சாப்பிடப் போகலாமா? நாழியாய்விட்டதே!" என்றார்.

"போகலாம். ஆனல் அதற்குமுன் உங்கள் தர்மச்செலவு ஆறணக் கணக்கு என்ன எப்படி என்பதைத் தெளிவு படுத்தி விடுங்கள். அப்படி என்ன அது தனியாகச் சொல்ல வேண்டிய விஷயம்?" என்று நான் மறுபடியும் மறந்துபோய்விடாமல் கேட்டேன்.

நண்பர் சிறிது தயங்கினர். நான் மேலும் சொன்னேன், "நீராவது தர்மம் செய்யவாவது ஐயா, என்னல் நம்ப முடியவில்லையே. பிச்சைக்காரர்களைக் கண்டால் கார்ப்பொரேஷனுக்கும் போலீஸுக்கும் மனு எழுதிப்போட வேணும் என்று சொல்லுகிறவர் அல்லவா நீங்கள்?"

தயங்கித் தயங்கியே நண்பர் பின் வரும் விஷயத்தைச் சொன்னர். "இன்று காலையில் ஆரம்ப பாடசாலை புஸ்தகங்கள் ஒரு மூட்டை வந்தது. அதைப் பார்த்துச் சில புஸ்தகங்களை எடுத்துக்கொண்டு நான் பேட்டைத் தெரு எலிமெண்டரி ஸ்கூலுக்குப் போனேன். அங்கேயும் உபாத்தியாயர்கள் மூலமாகத்தான் வியாபாரம். சில்லரையாக, ஒவ்வொரு புஸ்தகமாக நேரே மாணவ மாணவிகளிடம் விற்பனை செய்வதைவிட உபாத்தியாயரிடம் 'லாட்'டாகக் கொடுத்துவிட்டு மறுநாள் போய் அவர் கமிஷன் போக பணத்தை வசூல் பண்ணிக்கொண்டு வருவதுதான் சௌகர்யமாயிருக்கிறது...."

"பணம் முழுசாக வந்து விடுமா?"

"சில பேர் வசூலானபடியே கொடுத்து விடுகிறார்கள். சிலர் வசூலானதைச் சொந்தச் செலவுக்கு உபயோகப்படுத்திக்கொண்டு வசூலாகவில்லை, வசூலாகவில்லை என்று சால் ஜாப்புச் சொல்லுகிறார்கள். இரண்டாவது ரகப் பேர்வழிகளிடம் பணத்தை மாதம் கொஞ்சங் கொஞ்சமாக அவர்கள் சம்பளம் வாங்கும் போது வாங்கிக் கொள்ள வேண்டியதுதான். தொந்திரவுதான், என்ன செய்வது?" என்றார் விசுவநாதன்.

"அப்புறம் பேட்டைத் தெருவில் என்ன நடந்தது சொல்லுங்கள்."

"புஸ்தகங்களை நான் உபாத்தியாயரிடம் கொடுத்துவிட்டு நகருமுன் பள்ளிக்கூடத்துப் பெண்களும் பையன்களுமாக 'ஸார், ஸார்' என்று அவரை மொய்த்துக் கொண்டனர். அந்தக் களேபரத்தில் என் புஸ்தகங்கள் எல்லாம் வீணகிவிடாமல் இருக்க வேணுமே என்று எனக்கும் கவலை தான். ஆனாலும் அது உபாத்தியாயர் சமர்த்து. அவர் பொறுப்பு என்று நான் அவரிடம் ஒப்புவித்தபின் நான் கவலைப் படுவானேன் என்று பள்ளிக் கூடத்தை விட்டு வெளியேறினேன். வெளியே வராந்தாவில் ஒரு தூணில் சாய்ந்து கொண்டே உயிரே போய் விடும் போல ஒரு சிறுபெண் விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தாள். நான் இந்தமாதிரி யாராவது அழுதுகொண்டிருப்பதைக் கண்டால் முகத்தைத் திருப்பிக்கொண்டு போய்விடுவேன். ஆனல் அன்று அந்தப் பெண்ணைக் கண்டதுமே எனக்கு ரொம்பவும் பரிதாபமாயிருந்தது. தவிரவும் நான் விற்கப் புஸ்தகம் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டுத் திரும்பும் போது அது அப்படி அழுதுகொண்டிருந்தது, ஏதோ அபசகுனம் போல எனக்குப் பட்டது. சாவதானமாக அந்தப் பெண்ணை அணுகி "ஏனம்மா அழுகிருய்?" என்று கேட்டேன். அந்தப் பெண் விசித்துக்கொண்டே "ம்....ம்.... எங்கப்பாரு வூட்லே இல்லை புஸ்தகம் வாங்க ஆயாளைப் பணம் கேட்டேன். ஆயா இல்லைன்னு சொல்லிடுத்து பொஸ்தவம் எல்லாம் வித்துப்போயிடுமே அப்பாரு வரத்துக்குள்ளே" என்று சொன்னள். அவள் அழுகை என்

விசாரிப்பால் அதிகரித்தது. நான் என்னாலானவரையில் அவளுக்குச் சமாதானம் சொல்லிப் பார்த்தேன். 'புஸ்தகம் விற்காது, இருக்கும். நாளைக்குப் பணம் கொண்டுவா. புஸ்தகம் தரச்சொல்லுகிறேன்' என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அவள் அழுகை நிற்பதாகத் தெரியவில்லை. அவள் முகத்தை விட்டு என் கண்கள் திரும்ப மறுத்தன. ஏண்டா இந்த வம்பில், இவளிடம் பேச்சுக் கொடுத்து மாட்டிக்கொண்டோம் என்று இருந்தது எனக்கு. சிறு குழந்தை; இதைப்போன்ற பல குழந்தைகளின் ஆசையையும் ஆர்வத்தையும் அழுகையையும் நம்பித்தானே நான் பிழைக்கவேண்டியிருக்கிறது என்று நான் எண்ணித் தலை குனிந்தேன். இந்தக் குழந்தைக்குத்தான் புஸ்தகத்தில் என்ன ஆர்வம்! படிப்பிலும் அவ்வளவு ஆர்வமிருக்குமானால்.... என்று நான் எண்ணியவனாக அந்தக் குழந்தையின் அழுகையை நிறுத்துவதற்கு என்ன செய்யலாமென்று யோசித்தேன். உபாத்தியாயரிடம் போய்ப் புஸ்தகம் வாங்கி அந்த பெண் கையில் தர எனக்கு இஷ்டமில்லை. அவளை என்ன புஸ்தகம் வேணுமென்று கேட்டேன்; அவள் ஏதோ ஒருபுஸ்தகத்தின் பெயரைச் சொன்னாள். அதன் விலை அணா ஆறு. ஆறு அணாவை அந்தப் பெண் கையில் கொடுத்துவிட்டு நகர்ந்து விட்டேன். அந்தப் பெண் அடுத்த விநாடி அழுகையை நிறுத்தி விட்டு உபாத்தியாயரைச் சூழ்ந்து கொண்டிருந்த கூட்டத்தில் கலந்து கொண்டு விட்டாள். அவள் திரும்பி வரும் வரையில் நான் அங்கு காத்து இருக்கவில்லை. இதுதான் தர்மம் ஆறு அணா கணக்கின் விவரம்."

இதை அவர் தம்முடைய சுபாவமான, இயற்கையான குரலில் சொல்லவில்லை. அப்படித் தர்மம் செய்துவிட்டது அவருக்கே வெட்கமாக யிருந்ததுபோலும். நான் சொன்னேன் "நீரும் இப்படித் தர்மம் செய்வது என்று ஆரம்பித்து விட்டீரானால் ஊரில் மழை பெய்வது தாங்காதுங்காணும்" என்று.

நான் இதைச் சொல்லிக்கொண்டு இருக்கையில் புஸ்தக வியாபாரி விசுவநாதனைத் தேடிக்கொண்டு ஒரு சிறு பெண் வந்தாள். வயது எழெட்டு இருக்கும். பார்க்க லக்ஷணமாயிருந்தது. அவள் விசுவநாதனை அணுகி அவர் கையில் ஒரு ரூபாயைக் கொடுத்துவிட்டு "அப்பாரு வந்த வொடனே வாங்கிக்கிட்டு வந்துட்டேன். இன்னொரு புஸ்தவம் வேணும். அப்பாரு வாங்கிக்கச் சொல்லிச்சு. அந்த ஆறு அணாவையும் எடுத்துக்குங்க" என்றாள்.

அந்தப் பெண் ஸ்கூல் தூணில் சாய்ந்துகொண்டு எப்படி அழுதிருக்கும் என்று என்னால் கற்பனை செய்து பார்க்க முடிந்தது. அதனால் ஆறணா தர்மம் பெரிசல்ல, அந்தப் பெண்ணின் குதூகலம்தான் உண்மையிலேயே பெரிது என்று எனக்குத் தோன்றிற்று. நான் என் நண்பரை அதற்கு மேல் கேலி செய்யவில்லை.

# ஏழையின் திருநாள்

எல். ஆர். விசுவநாதன், கீரனூர்.

நான் குசேலரையும் அவர் குடும்பத்தையும் சினிமாவிலே பார்த்த பிறகு அங்குதான் பார்த்தேன்... என்னைத்தொடர்ந்து அவர் ஓடிவந்து, பலவந்தமாக உட்கார வைத்துக்கொண்டு படபடவென்று பேசத்தொடங்கினார்.

உலகம் குதூஹலிக்கத்தக்க உன்னதத் திருநாள் தீபாவளி. ஆனாலும் இவ் வருஷ தீபாவளியில் அவ்வளவு அதிகமான ஆர்ப்பாட்டங்களை யாரும் எங்குமே எதிர்பார்க்க முடியாமற் போயிற்று. இதற்குக் காரணம் பாழும் மஹாயுத்தம்தான். யுத்த சமயமென்பதற்காக நாள் கிழமைகளை யார் கொண்டாடாமல் விடுகிறார்கள்? பொன் வைக்கிற இடத்தில் பூவை வைத்து ஏதோ ஒரு விதமாகக் காரியம் நடத்துகிறார்கள்.

எனக்கு எப்பொழுதுமே பண்டிகைகள் கொண்டாடுவதில் அவ்வளவு விருப்பம் கிடையாது. அதாவது விவரம் தெரிந்த நாள் முதல். அதிலும் பத்திரிகைகள் படிக்கவும், கதை கட்டுரைகள் எழுதவும், ஆரம்பித்ததிலிருந்து பண்டிகைகளில் ஒருவித வெறுப்புகூட ஏற்பட்டுவிட்டது. முன்னொரு காலத்தில் (எனது பத்து வயதில்) வீட்டிலிருந்த பனிரண்டு ரூபாயைத் திருடிச்சென்று சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள கடைத்தெரு சீனவெடி, மத்தாப்பூ வகையராக்களை 'ஒருகை பார்த்ததும்' உண்டு. ஆனால் கடந்த ஆறு வருஷங்களாக எனக்கும் தீபாவளிக்கும் எவ்வித சம்பந்தமுமில்லாமல் போய்விட்டது. அதற்குக் காரணம் எனது பிதா.

தாது வருஷத்திய தீபாவளியன்று யமதர்மன் என் தந்தையின் தாதுவைக் கெட்டியாகப் பிடித்துவிட்டான். எல்லோரும் மங்களஸ்நானம் செய்யும் அதிகாலையில் என் தந்தை பூவுலகை வெறுத்துப் புண்ய உலகை அடைந்தார். பிரதி வருடமும் தீபாவளியன்று சிராத்தம். ஆகவே எனக்கு ஆயுள் பரியந்தம் தீபாவளி கிடையாது. எல்லோரும் தீபாவளிக்கு இரண்டுநாள் முன் பண்டிகைச் செலவுக்கு என்ன செய்வோமென்று கவலைப்பட்டால் சிராத்தச் சிலவுக்கு என்ன செய்வதென்று நான் கவலைப்படுவதுண்டு. இவ் வருஷமும் அப்படியே.

இவ் வருஷமும் தீபாவளியின் போது நான் மாயவரத்தில் என் சகோதரி வீட்டில் தங்க நேர்ந்தது. ஆகவே சிராத்தத்தையும் காவேரி தீரத்திலேயே செய்துவிட்டு ஊருக்குப் போவோமெனத் தீர்மானித்து மளிகை சாமான்களெல்லாம் வாங்கிவிட்டேன். நானொரு நித்தியவரட்சை என்பது என்னை நன்கு அறிந்தோருக்கு நன்கு தெரியும். மளிகை சாமான்களோடு போயிற்றா?........ சிராத்தமென்றால் பிராம்மண தக்ஷிணை வேறு உண்டே. அதற்கு ஒரு மூன்று ரூபாய் தேவை. யாரிடம் முகதலை வாங்கலாமென்று யோசித்தேன் யோசித்தேன் ஒன்றும் புலனாகவில்லை. தீபாவளி ரகளையில் யார் பணம் தருவார்கள்?

முதல்நாள் வெள்ளிக்கிழமை மாலை ஆறுமணி. யாரிடமாவது மூன்றுரூபாய் வாங்கிக்கொண்டுதான் இரவு வீடு திரும்புவது என்னும் உறுதியுடன் வெளிக்கிளம்பினேன். தெருவோடு

போய்க்கொண்டேயிருக்கையில் ஒரு தாழ்ந்த வீட்டுத் திண்ணையில் சோகமே உருவாக வீற்றிருந்தார் ஒருவர். அவர் எனது நெடுநாளைய நண்பர். இவ்வூரில் குமாஸ்தாவாக இருக்கிறார். அவரிடம் யாருமே கடன் கேட்கமாட்டார்கள். ஏனென்றால் அவரைவிட சிரம தசையிலுள்ளவர்கள் யாருமே இருக்க மாட்டார்கள் என்பதே அதன் காரணம். ஆனால் எனக்கென்னமோ அப்படித் தோன்றிற்று! குமாஸ்தா வாயிற்றே, கட்சிகாரர்கள் சன்மானதிகள் கிடைத்திருக்காதா, ஒரு மூன்று ரூபாய் கேட்டுப் பார்ப்போம் என்று அவரிடம் போனேன். தூரத்திலிருந்து நான் வருவதைப் பார்த்துக்கொண்டேயிருந்தவர் அருகில் சென்று எதிரில் உட்கார்ந்த பிறகு 'வா' என்றார். அவர் பார்வை தெருவிலேயே லயித்திருந்தது. என்னிடம் முகம் கொடுத்துப் பேசினாலல்லவோ நான் வந்த காரியத்தைச் சொல்லலாம். அவர் கண்களுக்குத் துணையாக என் கண்களும் தெருவிலேயே ஓடின.

எப்போதும் கல்யாணம், உத்ஸவம், பண்டிகை முதலிய தினங்களைவிட அதற்கு முன் தினங்கள்தான் அதிக சோபையாகத் திகழும். வரும் திருநாளுக்கான ஏற்பாட்டில் ஜனங்களின் உத்ஸாகமும் பரபரப்பும் முன் தினங்களில்தான் அதிகமாகக் காணும். அன்றும் தீபாவளிக்கு முதல் நாள் அல்லவா? சிறுவர், சிறுமியர், மங்கைகள், யுவதிகள், ஸ்திரீகள், வாலிபர்கள், விருத்தர்கள்........எல்லோரும் தெருவில் துரிதமாகப் போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருக்கின்றனர். கடைகளுக்குப் போவோர் எடுக்கவேண்டிய ஜவுளி தினுசுகளைப்பற்றிப் பேசிக்கொண்டே காற்றைப்போல் கடிந்து செல்கின்றனர். கடையிலிருந்து திரும்புவோர் கைகளிலும் பைகளிலும் ஜவுளிகளும், மத்தாப்பு பெட்டிகளும் (வாய் வார்த்தைகளிலோ வாங்கப்பட்ட உடைகளின் பிரபாவமும். அன்று தெரு கோலாஹலம் தான்.)

எவ்வளவு நேரந்தான் நாங்கள் அப்படி உட்கார்ந்திருப்பது? இந்த நிலைமை அவருடைய பையனுக்கே பொறுக்கவில்லை போலும்! உள்ளேயிருந்து ஓடி வந்தான். நண்பரின் மடியைப் பிடித்திழுத்தான். 'வா அப்பா கடைக்கு' என்று சிணுங்கினான். பளார் என்று ஒரு அறை! சிறுவன் வாசற்படியில் சுருண்டு விழுந்தான்.

"அயோக்ய ராஸ்கல்!" என்று திட்டிக்கொண்டே துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு எழுந்து திண்ணைக் கோடியில் போய் உட்கார்ந்தார் நண்பர். நிலைமையைக் கண்டதும் சொல்லிக் கொள்ளாமல் வந்தவழியே செல்வதுதான் உசிதமெனப்பட்டது. எழுந்து தெருவை யடைந்தேன்.

"மிஸ்டர்!" என்றழைத்தார் நண்பர். அங்கு நின்றபடி" திரும்பிப் பார்த்தேன். "எங்கே மிஸ்டர் கிளம்பி விட்டே? வா மிஸ்டர், போகலாம்" என்றார் நண்பர்.

"எங்கே வந்தே. எங்கே போறே?" என்றார் தொடர்ந்து.... "சும்மாத்தான் வந்தேன். கடைத் தெருப் பக்கம் போறேன்."

"உம்......... இந்தப் பாழாய்ப் போன தீபாவளி மாமாங்கமாட்டமா பனிரண்டு வருஷத்துக்கு ஒரு தடவை வந்தாப் போறதோ! ஏன் இப்படி வருஷாவருஷம் வந்து எழவு கொடுக்கிறதோ தெரியவில்லை........"—

இந்த சமயத்தில் அந்த வீட்டின் சொந்தக்காரர் பெண் தீபம் ஏற்றித் திண்ணையில் கொணர்ந்து வைத்தாள். கையெடுத்துக் கும்பிட்டாள்.

"என்ன கும்பிடு வேண்டியிருக்கு! கல்லை யெடுத்து அடிச்சு நொறுக்கு அந்த விளக்கை!"

"சிவசிவா!எனப்படி வெள்ளிக்கிழமை சந்தியாகாலத்தில் சொல்கிறீர்? 'வேண்டாம்" என்றேன்.

"நாளும் கிழமையும் நாசமாய்ப் போச்சு! இப்படிச் சற்றே உள்ளே வா."

"இல்லே எனக்கு கொஞ்சம் காரியம் இருக்கு........"

"எல்லாம் போகலாம் மிஸ்டர்" என்று கையைப் பிடித்து உள்ளே அழைத்துப்போனர் நண்பர். அந்த வீட்டுக்கு நாலு குடித்தனம். எல்லாக் குடித்தனக்காரர்களும் கடைக்குப் போயிருக்கிறார்கள். வீட்டுக்காரரின் பெண் ஓரறையில் உட்கார்ந்து தீபாவளி மலரொன்றைப் படித்துக் கொண்டும் ஆவலோடு ஜன்னல் வழியே தெருவை நோக்கிக்கொண்டுமிருந்தாள். கடைக்குப்போன பெற்றோர்களையோ, தலை தீபாவளிக்காக வந்திருந்த புருஷனையோ எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறாள் அந்த மடக்கொடி!

நண்பர் ஜாகை கொல்லைப்பக்கம். சின்னதான ஒரே அறை. அதிலே சட்டிபானைகளோடு சில பித்தளைப் பாத்திரங்களும் மூலைக்கொன்றாக உருண்டு கிடந்தன. பழங்கந்தைகளான தலையணை பெட்ஷீட், பிரப்பம்பாய் முதலியன சுருட்டியும் சுருட்டாமலும் அறையில் அலங்கோலமாகக் கிடந்தன. சுமார் 18வயதுடைய பெண் பாயில் படுத்திருந்தவள் என்னைக் கண்டதும் எழுந்து ஒரு மூலையில் சென்று பதுங்கினாள். அவள் தலை அலங்கோலமாகப் பிரிந்து கிடந்தது. அவள் மணமாகாதவள் என்பது எனக்கு முன்பே தெரியும். இன்னும் நாலைந்து பெண் குழந்தைகள் அழுத கண்ணும் சிந்தின மூக்குமாக மூலைக்கொன்று நின்றுகொண்டும் உட்கார்ந்து கொண்டுமிருந்தன. காலையில் காப்பியோ வெந்நீரோ போட்ட அடுப்பின் கீழ் சாம்பலும் கரிப்பாத்திரங்களும் கிடந்தன. இவ்வளவு கோலாஹலத்தையும் நான் கூரைமேலிருந்த கண்ணாடி வெளிச்சத்தால் பார்த்தேனே தவிர அந்த அறையில் விளக்கில்லை. விளக்கிருந்தால் இன்னும் என்ன தென்படுமோ!

கொல்லைப் பக்கத்தில் ஒரு சிறு குழந்தையின் நீண்ட அழுகைக் குரலும், இடையிடையே பொத்துப் பொத்தென்று முதுகில் அறையும் சப்தமும் கேட்கவே கொல்லைப்பக்கம் நோக்கினேன். நண்பரின் மனைவி தீட்டுக்காரியாக காட்சியளித்தாள். அவளிடம் மூன்று வயது குழந்தை எதையோ கோரி அழுகிறது. அவள் அடிக்கிறாள். எனக்கு அங்கே நிற்கப் பிடிக்க வில்லை. வாசற்புறம் வந்து விட்டேன்.

நான் குசேலரையும் அவர் குடும்பத்தையும் சினிமாவிலே பார்த்த பிறகு இங்குதான் பார்த்தேன். என்னைத் தொடர்ந்து நண்பரும் ஓடி வந்து பலவந்தமாக உட்கார வைத்துக்கொண்டு படபட வென்று பேசத்தொடங்கினர்.

* * *

எப்போதுமே நான் தரித்திரன் என்பது உனக்குத் தெரியும். ஏழெட்டுவேலி நிலபுலனோடு வாழ்ந்ததெல்லாம் பொய்யாய்ப் போச்சே. சுமார் முப்பது வருஷகாலமாக கால் வயத்து சாப்பாடு தான். இந்தத்தொழில் ஏமாற்றமுள்ளது சிலமாசம் அரை வயிற்றுக்கு வழியுண்டு. சில மாசம் கால் வயிற்றுக்கு லாட்டரிதான். தீபாவளிக்கு இனும் ஏழெட்டு ரூபாய் கிடைப்பதுண்டு. இந்த வருஷமோ செல்லாக் காசுக்குக்கூட வகையில்லை. மூன்று மாசத்து வாடகைபாக்கி. மளிகைக் கடைக்குப் பதினேழு ரூபாய் கொடுக்கணும். இன்னும் பல பிடுங்கல் இருக்கு. இந்த லட்சணத்திலே........ இழவு தீபாவளி வந்து கழுத்தை அறுக்கிறது. குழந்தைகளிலோ முக்கால்வீசம் டஜன்! ஒண்ணுக்காவது ஒரு நாளும் வயிறு நிறையச் சோறு கிடையாது. உடல்முழுக்க துணி கிடையாது. இருக்கிறது ஒரே பிள்ளை. அந்தப்பயலுக்கு ஒரு முழச் சவுக்கம் வாங்கிக் கொடுக்க வழியில்லை. மக்களுக்கு நம்ம நிலைமை

தெரிகிறதா? இல்லே .ஊர்மக்கள் தான் அடக்கமாயிருக்கா? இரண்டு மில்லே. எல்லா பீடைகளும் துணிமணிகளைக் கொண்டு வந்து பீற்றிக்கிறதுகள். வீட்டிலே அதைக் கண்டு மழை பெய்கிறது. ஸம்ஸாரம் பஹிஷ்டை. கொல்லேயில் உட்கார்ந்தபடி தொணதொண வென்று பிடுங்கித் தின்கிருள். பெரியவள் இருக்காளே பெண்ணரசி, அவளோ நித்ய துக்கம் கொண்டாடறவள். தீபாவளிக்காக ஸ்பெஷல் துக்கம் கொண்டாடருள். ஊர் பெண்களைப்போல் தனக்கும் காலாகாலத்தில் கல்யாணம் காட்சி இல்லேயே என்கிறதோடு அடுத்த வீட்டுத் தலே தீபாவளி அமர்க்களப் படுகிறது. மாப்பிள்ளே வந்து மூணு நாளாச்சு. ஒரே கும்மாளந்தான். அதையெல்லாம் காணக்காண நம்ம பொண்ணுக்கு மனஸு என்னமோ பண்றது. மற்ற குழந்தைகளேப் பற்றியோ கேட்க்க வேண்டியதில்லே. அகவிலேயும் நம் நிலேமையும் அதுகள் என்ன கண்டது? ஒப்பாரி வைக்கிறதுகள். பயலோ பிராணனே வாங்கருன். அனேகமா இன்னி ராத்திரி நான் தற்கொலே பண்ணிக்கும் படியா இருந்தாலும் இருக்கும்—"

சற்று நிறுத்திப் பெருமூச்சு விட்டார்.

"நேத்து ராத்திரி அரிசி இல்லே. வாங்கக் காசும் இல்லே. கடனும் கிடைக்கவில்லே. கொஞ்சம் பழையது இருந்தது. குழந்தைகள் கரைச்சுக் குடிச்சுதுகள். இன்னிக்குக் காலமே துளிக்காப்பித்தண்ணி குடிச்சேன். இன்னும் ஜலபானம் பண்ணல்லே. குளிக்கவுமில்லே. என் முதலாளி கண்டிப்பா ஒத்தாசைபண்ண மறுத்துட்டார். போன மாஸத்துலே ஆத்துக்காரிக்கு அத்யாவஸ்யைகி ஐம்பது ரூபாய் அழுதுட்டேன். காலமே போய்ப் பார்த்தேன், 'எப்போ பார்த்தாலும் உனக்கு வரட்டைதான். ஒனக்கு ஒத்தாசைபண்ண குபேரனலேயும் முடியாது. இஷ்டமிருந்தா வேலே பாரு, இல்லாவிட்டால் நின்று விடு. அடிக்கடி என்னைத் தொந்திரவு பண்ணுதே' என்று கண்டித்துச் சொல்லிவிட்டார்." என்று வர்ணித்துக் கொண்டே போனுர் எனக்கு அழுகை வந்தது.


அந்த சமயம் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ஒரு சாமியார், நாற்பது வயதிருக்கும். துலா ஸ்னனத்திற்காக மாயவரம் வந்திருந்தார் போலும். ரயிலில் இறங்கி ஜட்காவில் வந்தார். ஆளுக்கு ஒரணு சத்தம். வண்டியை விட்டு இரங்கினவர் நேரில் எங்களிடம் வந்தார். "ஸார் ஒரணு, சேஞ்சு இருக்குமா?" என்று வினவினுர். நாங்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டோம். அஸ்தமன சமயமல்லவா? என் விலாவில் ஒரு கொசுக் கடித்தது. கதர் அங்க வஸ்திரத்திற்குள் கையை விட்டு விலாப் புறத்தைத் தடவிக்கொண்டேன். அதைக் கண்ட சாமியார், "பலே நான் கேட்ட முகூர்த்தம் மடியில் சில்லரை இருக்காப் போலிருக்கு.ஸந்தோஷம்" என்ருர். சற்றுப்பொறுத்து நான் வெறுங் கையை வெளியில் எடுத்ததும் சாமியார் ஏமாந்துபோய் "என்ன ஸார் !......." என்றவாறே போய்விட்டார்.

நாங்கள் எங்களே மறந்து கலீரென்று சிரித்துவிட்டோம். அந்தச் சிரிப்பின் அர்த்தம் ஆண்டவனுக்கே விளங்கும்

---

## ஆராய்ச்சிக் கட்டுரை—

தாவர வர்க்கங்களிலிருந்து பிழியப்படும் பலவித எண்ணெய்களைப்பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளே வரவேற்கிறோம். எண்ணெய்களில் உள்ள சத்துக்களின் தன்மை, தாரதம்மியம் இவற்றையும், பொதுவாக எண்ணெய்களே விரைவில் கெட்டுப்போகாமல் வைத்துக் கொள்ளுவதற்கான முறைகளேயும் விளக்கி எழுதியனுப்பக் கோருகிறோம்.



எல்லா
நோவுகளையும்
தீர்க்கும்
அமிர்தாஞ்சனம்
உத்தமம்
பாரத மணி.




நண்பா! போய் ஸிரோலின் 'ரோச்' சாப்பிடு.
இப்பொழுதே
ஸிரோலின்
'ரோச்'
சாப்பிட்டு இருமல்
அல்லது ஜலதோ-
ஷத்தை ஒழியுங்கள்
SIROLIN
ஸிரோலின் 'ரோச்'
இருமலையும் ஜலதோஷத்தையும் ஒழிக்கிறது

# தமிழின் பெருமையும் நம்மவர் கடமையும்

இயற்றியவர் : டாக்டர் உ. வே. சாமிநாதையர்
முன்னுரை : ஸ்ரீ எஸ். கலியாணசுந்தரையர்

( 204-ம் பக்கத் தொடர்ச்சி )

பிரதி செய்தவர்களாலும், நூல் கற்பவர்களாலும், பாடம் சொல்பவர்களாலும், நூல் இயற்றுகிறவர்களாலும், பதிப்பிப்பவர்களாலும் தமிழ் வாழ்கின்றது. அவர்களே தமிழைப் 'பாலனம் செய்த மேலவர்.' இவ்வளவு வகையிலும் ஐயரவர்கள் தமிழைப் பாலனஞ் செய்து வந்தார்கள். 'சொல்லிய வண்ணம் செய்யும் பெருமை' அவர்கள் பால் இருந்தது.

'வெள்ளைக்காரன் அது செய்தான் இது செய்தானென்று சொல்லி ஆச்சரியப்படுகிறீர்களே! நீங்கள் என்ன செய்கிறீர்கள்? அவன் செய்வதைப் பார்த்து ஆவென்று வாயைத் திறந்துகொண்டு நிற்கிறீர்களே! நீங்களும் முயன்று செய்ய வேண்டாமா?' என்று ரோஷமூட்டும் தேசத் தொண்டர்கள் பலரை இன்னும் பார்க்கிறோம். இந்த வார்த்தைகளையே ஐயரவர்கள் தம்முடைய மென்மொழிகளால், "விதப்பித மாவுறு புதுமைகள் பலவும், கண்ணினிற் கண்டு களிப்பதையன்றி, எண்ணிச் செய்வலியியை கின்றாரவர்" என்று அறிவுறுத்துகின்றார்கள்.

'தமிழும் ஆங்கிலமும் தெரிந்தோர் நம்மவர்களுக்கு அவற்றை அப்பொழுதப்பொழுது சபைகளில் எடுத்துச் சொல்ல வேண்டும். ஆங்கில மொழியிலிருந்து பல நூல்களை மொழிபெயர்த்து அச்சிட வேண்டும்;' என்று சொல்லி முதற் செய்யுளை முடிக்கின்றார்கள். இந்த மொழிபெயர்ப்புத் தொண்டை மேலும் மூன்று செய்யுட்களால் வற்புறுத்துகின்றார்கள். ஒரு பாஷை வேறு பாஷைகளின் சம்பந்தத்தால் வளம் பெறுமேயன்றி மங்காது என்னும் கொள்கையுடையவர்களாதலின் இந்த விஷயத்தை அவர்கள் மேலும் அறிவுறுத்துகிறார்கள். 'ஆரியமென்னும் அரிய துணையைப் பெற்று விளங்கும் அமுதத் தீஞ்சொல்லாகிய தமிழ் ஆங்கிலமொழி நூற்பொருளையும் அணிந்து குலவச் செய்ய வேண்டும்' என்பதில் அவர்கள் கருத்து விளங்குகிறது.

* * *

சபைகளில் ஆங்கிலத்திலே பேசுவதுதான் கௌரவமென்று நினைத்த காலம் அது. இப்பொழுதெல்லாம் ஆங்கிலத்தில் வல்லாரும் 'தமிழிலே பேசுவதும் எழுதுவதும் நம் கடமை' என்பதை உணர்ந்து வருகிறார்கள்.

'சபையிலே இந்தத் தேச பாஷையில் உங்கள் கருத்தை அமைத்துச் சொல்லுங்கள். நான் உங்களுக்குச் சொல்ல வேண்டுமா? அப்படிப்பேசினால் உங்கள் பிரசங்கம் தேனும் பாலும் கலந்தது போல இருக்குமே! என்று ஒரு செய்யுளில் சொல்லுகிறார்கள்.

'செந்தமிழ்ச் சொல்லை விழைந்த குடந்தை நண்பருடைய குணத்தை' வியந்து பிரசங்கத்தை நிறைவேற்றுகிறார்கள் ஐயரவர்கள்.

ஐயரவர்களுடைய விரிந்த உள்ளமும் அநுபவ பூர்வமான கருத்துக்களும் இந்தப் பாடல்களில் புலப்படுகின்றன. 'குடந்தை நண்பரு'க்குச் சொன்ன வார்த்தைகள் தமிழன்பர் அனைவருக்குமே பொருந்துவனவென்பதற்குத் தடை ஏது?

இறவா நூல்களைத் துறவா தெழுதிப்
படித்தும் பிறரைப் படிப்பித் தும்பல
பாடியு மச்சிற் பதிப்பித் தும்மிதைப்
பாலனஞ் செய்த மேலவர் பலரின்
சரித்திர மதனை விரித்திடிற் பெருகும்
இவ்வியல் பிற்று மிம்மொழி முன்னாள்
நம்புறு கும்ப சம்பவ ராற்புரி
இலக்கண முடைத்தா யிருத்தலி னிந்நாள்
மாணமை கும்ப கோணநன் னகர்வாழ்
உங்களாற் காத்தற் குரிமையு முடைத்தால்
ஈங்கிது நிற்கத் தூங்க லிலாது
தம்மொழி யன்றி யெம்மொழி களுமே
விருத்தி பெறச்செய் கருத்துடை யவரும்
தினந்தொறும் புதுமையைத் தெரித்தே நம்மவர்
மனந்தொறு மறிவை வளர்த்திடு பவரும்
அன்புடை யவரு மாகிய விந்தத்
துரைத்தனத் தார்செய லுரைக்கடங் குவதோ
இவர்திற முங்கட் கியம்பிட நாணார்?
இக்கா லத்தும் புக்கா தரவொடு
நவமுறு மிவர்மொழி நாள்பல முயன்று
கற்றோ ரன்றி மற்றோர் முன்னை
நிலைமையி னின்று நீங்கின ரல்லர்
விதம்வித மாவுறு புதுமைகள் பலவும்
கண்ணினிற் கண்டு களிப்பதை யன்றி
எண்ணிச் செய்வலி யியைகின் றாரவர்
அப்போ தப்போ தரசர்பா லுறுவன
எப்போ துந்தெரிந் திடுவா ரல்லர்.
எச்சம யத்திடை யென்வந் துறுமோ
என்றே நடுங்கு கின்றார் சிலரே
ஆகையாற் றமிழோ டரசர்தம் மொழியும்
ஓகையா லறிந்தோ ருவப்புட னன்னோர்க்
காவன வற்றை யடிக்கடி யவையின்

---

**65-69 நூலைப்பாது காத்தோர்** துறவாது-கைவிடாமல் **70-74 பொருத்தம் 71.** கும்பசம்பவர்-அகத்தியமுனிவர்; **71-4.** கும்பத்திலிருந்து உதித்தவரால் ஆராயப் பெற்றமையின் கும்பத்தின் சம்பந்தம் பெற்ற கும்பகோணத்தினரால் பாதுகாத்தற்குரியது; **75-82 துரைத்தனத்தார் செயல்;** 75. தூங்கல்-சோர்தல்; 78. புதுமையைத் தெரித்து-புதிய புதிய பொருள்களைத் தெரிவித்து; **83-93 நம்மவர் நிலை;** 83. ஆதரவொடு-அன்பொடு; 84. நவம்-புதுமை; 89. வலி-வண்மை; **94-104 தமிழும் ஆங்கிலமும் அறிந்தவர் கடமை;** 94. அரசர் தம்மொழி-ராஜாங்கபாஷையாகிய ஆங்கிலம்; 95. ஓகையால்-சந்தோஷத்தோடு; 96. அவை-சபை;

மேவுற வுணர்த்தி விளக்குக வன்றியும்
இன்றி யமையா தொன்றுபன் னூலை
ஆங்கிலே யத்திருந் தருந்தமிழ் மொழியிற்
பாங்கி லேயப் பயன்பட வெழுதி
எழுதா எழுத்தி னியைவித் தவர்க்கு
வழுவா வண்ணம் மாண்புற வுணர்த்தின்
ஆங்கவர் துன்ப மகலும
ஈங்கிதிற் செய்வ தில்லைவே றென்றே.

[2]

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

மாதனமென் றறிஞர்கொளு மருந்தமிழை
முன்னையினும் வளர்த்தற் கேற்ற
சாதனங்கள் பலவிருப்ப விவற்றுனன்-
இயற்றவல்லோர் தாமி ருப்ப
ஏதமிலாப் பொருணயந்தேரத் தகமகிழும்
பேரறிஞ ரிருப்ப விந்தப்
பூதலமீ திம்மொழிதான் பெருகாம
லருகலென்ன புதுமைத் தாமால்.

[3]

ஆரியமென் றியப்பலுறு மருந்துணையை
யணைந்திலகு மமுதத் தீஞ்சொல்
நேரியசெந் தமிழ்மடந்தை யகங்குளிர்ந்து
முகமலர்ந்து நிலைபெற் றோங்கக்
கூரியநன் மதியரசர் மொழிப்பொருளை
யளித்தணிந்து குலவச் செய்திப்
பாரியல வளித்திடுநங் காரியங்கள்
தடையின்றிப் பலிக்கு மன்றே.

---

100. பாங்கிலேய—நம்மவர் மனப்பாங்கொடு பொருந்த. 101. எழுதா எழுத்து-அச்செழுத்து; அவர்க்கு—ஆங்கிலமறியாத நம்மவர்க்கு; (2). ஏதம்-தீங்கு; இம்மொழி-தமிழ்மொழி; அருகல்-குறைதல்; (3). அரசர் மொழிப்பொருளை அணிந்து-ஆங்கில மொழியிலுள்ள விஷயங்களை மொழிபெயர்த்து அணிந்து; இப்பார் இயல-இந்த உலகத்தில் வழங்கும்படி;

**[4]**

பன்மொழி நூல் களைமுயன்று மொழிபெயர்த்துப்
பலரும்வெளிப் படுத்த லாலிம்
மன்மொழிதா னட்குநாள் வளர்ந்தோங்கு
கின்றதிந்த வகைசெய் தானந்
தென்மொழியும் பெருகுமெனற் கையமெவ
னிவ்வண்ணம் செய்வே மென்று
முன்மொழிவோர் தமக்கும்பின் மொழிவோர்க்கும்
நினைவூட்ட மொழிந்தேன் மன்னோ.

**[5]**

(கட்டளைக் கலித்துறை)

நானுங் களுக்கு மொழிவதென் னேயிந்த நாட்டின்மொழிப்
பானுங் கருத்தை யமைத்தே யவையிற் பகரின்மலை
மானுந் துயரங்கள் மாயும்பல் லோரு மகிழ்பெறுவர்
தேனுஞ் சுவைபெறு பாலுங் கலந்த செயலொக்குமே.

**[6]**

விரும்பி யரசர் மொழிபடிப் போரினும் வேட்கைமீஇக்
கரும்பிற் சுவைபெறு தென்மொழிப் பாற்றங் கருத்தமைத்தே
திருந்தப் படித்திடிற் றுமேபன் னூல்க டெரிதிறமை
பொருந்தி யிருமைப் பயன்மிக மேவுவர் பொய்யிதன்றே.


**[7]**

(எழு சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்)

மடந்தை மேனிய னிடந்த பூமியன் மதத்த ராதியர் மதித்ததாய்க்
கடந்த ருந்தவன் மடந்த விர்ந்தொளி கவின்ற மேலவர் நுவன்றள்ரு
திடந்த யங்கிய லடைந்த தாயுறு செழுந்த மிழ்ச்சொலை விழைந்தநம்
குடந்தை நண்பர திடந்த யங்கு குணத்தை யெங்ஙன முரைப்பேன

---

(4). இம்மன் மொழியென்றது-ஆங்கில மொழியை; தென்மொழி-தமிழ்; ஐயம் எவன்-சந்தேகம் என்ன; (5).இந்தநாட்டின் மொழிப்பால் நும் கருத்தை அமைத்தே-இந்தத்தேசபாஷையாகிய தமிழில் உங்கள் கருத்தை அமைத்து; அவையிற் பகரின்-சபைகளிற் பிரசங்கம் செய்தால்; மலைமானும்-மலையைஒத்த; (6). அரசர் மொழி-ஆங்கிலம்; வேட்கைமீஇ-விருப்பம் பொருந்தி; தென்மொழி-தமிழ் (7). மடந்தை மேனியன்-சிவபெருமான்; இடந்த பூமியன்-பூமியை வராகாவதாரத்தில் பெயர்த்த திருமால்; இவ்விருவரையுந் தொழும் மதத்தினரும் மதிக்கப்பெற்றதாகி, மதிக்கப்பெற்றது-தமிழ்; கடந்தருந்தவன்-அகத்தியமுனிவனும்; மடம் தவிர்ந்து ஒளி கவின்ற மேலவர்-அறியாமை நீங்கப்பெற்று அறிவு விளங்கிய முன்னோரும்; நுவன்றருள் திடம் தயங்கு இயல் அடைந்ததாய்-இயற்றிய வன்மை விளங்கும் இலக்கணத்தைப் பெற்றதாகி.




# தீபாவளி

**'அண்ணன்'**

சாத்தூர் என்கிற கிராமத்தில் ஆத்துவையர் என்று ஒரு பணக்காரர் இருந்தார். அவருக்கு லக்ஷ்மி என்று ஒரே ஒரு பெண்ணைத்தவிர வேறு குழந்தைகளே கிடையாது. ஆகவே அவர் லக்ஷ்மியை மிகவும் செல்லமாக வளர்த்து வந்தார். ஆத்து ஐயருக்குச் சிவகாமி என்று ஒரு சகோதரி இருந்தாள். அவள் புருஷன் மிகவும் துஷ்டன். பல கெட்ட காரியங்களில் பிரவேசித்து சொத்தையெல்லாம் இழந்து எழையானார். சிவகாமிக்கு ஒரு குழந்தை பிறந்தது. அதன் பெயர் ஸரஸ்வதி. குழந்தைபிறந்த சில நாளில் சிவகாமி இறந்துவிட்டாள். அவள் புருஷன், குழந்தையையும் குடும்பத்தையும் கவனிக்காமல் எங்கோ ஓடிப் போய்விட்டபடியால் ஆத்துவையரே ஸரஸ்வதியையும் கொண்டு வந்து தம் விட்டிலேயே வைத்துக்கொண்டு லக்ஷ்மியுடன் சேர்த்து வளர்த்து வந்தார்.

ஆத்துவையரின் மனைவி பார்வதியம்மாள் மிகவும் நல்லவள். அவளும் ஸரஸ்வதியைத் தன்குழந்தை லக்ஷ்மியை போலவே பாவித்து மிகவும் அன்பாக வளர்த்து வந்தாள். லக்ஷ்மியும் தன் பெற்றோர்கள் ஸரஸ்வதியிடம் மிகமிக அன்பாக இருப்பதைக் கண்டு தானும் அவளைத் தன் கூடப்பிறந்தவள் போல் நினைத்து ஆசையாக இருந்துவந்தாள். இரு குழந்தைகளும் வளர்ந்து ஒன்பது வயதை யடைந்தன.

ஆத்துவையர் பெரிய பணக்காரர் அல்லவா? தீபாவளிக்கு ஒரு மாதம் முன்னாலிருந்தே குழந்தைகளுக்குப் பல விதமான பாவாடைகளும், சட்டைகளும், விதவிதமான மத்தாப்பூ பட்டாஸ் கட்டுகளும் வாங்கித் தருவது வழக்கம். அவர்கள் தீபாவளி யன்று விடியற் காலம் ஜோடியாக எழுந்து மங்கள

நீராடிப் பட்டாடைகள் உடுத்திப் பட்டாஸ், மத்தாப்பூக்களுடன் வாசலில் வந்து நிற்பது கண் கொள்ளாக்காட்சியாக இருக்கும்.

எக்காலத்திலுமே அதாவது காலை எழுந்தது முதல் பல் துலக்குவது, காப்பிசாப்பிடுவது, படிப்பது, குளிப்பது சாப்பிடுவது; மாலையில் விளையாடுவது தூங்குவது, முதலிய தினசரி வேலைகளிலும், விசேஷ நாட்களில் வெளியில் சென்று வருவதிலும் குழந்தைகள் ஜோடியாகவே இருப்பது வழக்கம். உயரம், பருமன், நிறம், உடை அனைத்திலும் இரு குழந்தைகளும் அதி ஒற்றுமையாக இருந்தமையால் ஊரார் அக் குழந்தைகளிடம் சற்று நேரமாவது சம்பாஷிக்காமலிருக்கமாட்டார்கள்.

இருவரில் ஸரஸ்வதி கொஞ்சம் சமர்த்தாகப் பேசுவாள். அதனால் எல்லோரும் ஸரஸ்வதியைக் கொஞ்சம் அதிகமாகக் கொண்டாடுவார்கள். இதில் லக்ஷ்மியின் மனதில் கொஞ்சம் வருத்தந்தான். நாள் ஆக ஆக அந்த வருத்தமும் ஜாஸ்தி ஆகிக்கொண்டே வந்து பொறுமையும் அசூயையும் ஏற்பட்டு விட்டன. துவேஷம் அதிகரிக்கவே லக்ஷ்மி ஸரஸ்வதியுடன் சேருவதையே விட்டுவிட்டாள்.

ஒருநாள் லக்ஷ்மி ஸரஸ்வதியிடம் வலுவில் சண்டை பிடித்து அவளை அடித்துவிட்டாள். பார்வதியம்மாள் சமாதானம் செய்ய வந்தபோது லக்ஷ்மி தன்னை மீறின ஆத்திரத்துடன் சொன்னாள்:— "நீ என்னைத்தானே பெற்றாய்; ஸரஸ்வதியையுமா பெற்றாய்? அவள் பிறத்தியார் வீட்டுப் பெண்தானே? அவளுக்கு என்ன இந்த வீட்டில் இத்தனை செல்வம்? அதிலும் அவள் பரம ஏழையாம். கோடி வீட்டுக் குஞ்சம்மாள் சொன்னாள். அப்படிப்பட்ட ஏழை ஸரஸ்வதிக்கும், பணக்காரியான எனக்கும் சட்டை, பாவாடை சரிசமானமா? இனிமேல் ஸரஸ்வதியைச் செல்வமாக வைத்துக்கொள், நான் தோட்டத்து கிணற்றில் செத்துப்போறேன்.."

"சரஸ்வதியை இனிமேல் செல்லமாக வைத்துக்கொள்வதில்லை" என்று கூறி ஏதோ ஒருவாறு சமாதானம் செய்து வைத்தாள் பார்வதியம்மாள். சொன்னாளே தவிர, எப்போதும் போல் தான் ஸரஸ்வதியை நடத்திவந்தாள். லக்ஷ்மியின் அசூயை வளர்ந்து கொண்டே வந்தது.

இந்த வருஷம் தீபாவளிக்கும் ஆத்துவையர் இரு குழந்தைகளுக்கும் ஸரிஸமானமாக உடைகளும், மத்தாப்பூ முதலியவைகளும் வாங்கிக் கொடுத்து விட்டு ஒருமுக்கிய அலுவலை உத்தேசித்துச் சென்னபட்டணம் போய்விட்டார்.

தீபாவளியன்று எண்ணெய் தேய்த்துக் கொள்ள முடியாதென்று பிடிவாதமாக மறுத்தாள் லக்ஷ்மி. ஸரஸ்வதிக்குத் தன் தகப்பனார் வாங்கி வந்த பாவாடை, சட்டைகளையும், மத்தாப்பூக்களையும் கொடுக்கக்கூடாதென்று அழுதாள். பார்வதியம்மாள் எவ்வளவு சமாதானம் செய்தும் லக்ஷ்மி கேட்கவில்லை. பார்வதியம்மாள் கோபம் கொண்டு லக்ஷ்மியை அடித்துவிட்டாள். நயத்திலும், பயத்திலும் அவள் கட்டுப்படாததைக் கண்ட புத்திசாலியான ஸரஸ்வதி "மாமி, லக்ஷ்மி சொல்றது போலவே செய்து விடுங்கள். எனக்குப் புதுப் பாவாடை எல்லாம் வேண்டாம். நான் பழசையே கட்டிக்கிறேன்" என்றாள். பார்வதியம்மாளும் சம்மதிக்கவே லக்ஷ்மி எண்ணெய் தேய்த்துத் தன் பாவாடை சட்டைகளை அணிந்து கொண்டு ஸரஸ்வதிக்காகத் தைத்தவைகளைப் பெட்டியில் வைத்துத் தன் தாயாரைப் பூட்டச் சொல்லித் தன் கையில் சாவியை வாங்கி கொண்டாள். தனக்குத் தெரியாமல் ஒருவேளை ஸரஸ்வதிக்குப் பாவாடை சட்டைகளைத் தாயார் கொடுத்து விட்டால் என்ன செய்வது என்ற சந்தேகம் அவளுக்கு. பிறகு இருவருடைய மத்

தாப்பூக்களையும் தான் ஒருவளே எடுத்துக் கொண்டு வாசற்பக்கம் சென்று கொளுத்தத் தொடங்கினள் லக்ஷ்மி. பார்வதியம்மாள் ஸரஸ்வதிக்கு எண்ணெய் தேய்த்துப் பழைய துணிகளைக் கட்டி வாசலில்போய் வேடிக்கை பார்க்கும்படி அனுப்பிவிட்டுத் தான் எண்ணெய் தேய்த்துக் கொண்டாள்.

ஸரஸ்வதி சமர்த்தல்லவா? தனக்கு மத்தாப்பூ வேண்டுமென்று சொல்லவில்லை. லக்ஷ்மி கொளுத்துவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு வித்தியாசமான கெட்ட எண்ணம் ஏற்படவே இல்லை. அப்படியிருந்தும்லக்ஷ்மிக்கு ஸரஸ்வதியைப்பார்த்தாலே பற்றிக்கொண்டு வந்தது ஆத்திரம் அவளுக்கு ஏதாவது கெடுதல் செய்ய வேண்டுமென்று தோன்றிற்று. அவளும் குழந்தைதானே, எந்தக் காரியத்தைச் செய்யலாம், எதைச் செய்யக்கூடாது என்று தெரிந்துகொள்ளாமல் ஸரஸ்வதி நாலு வீட்டுக்கப்பால் ஒரு குழந்தை மத்தாப்பூ கொளுத்துவதை வேடிக்கை பார்த்துக் கொண்டே இருக்கையில் அவள் பின்னால் மெதுவாகச் சென்று ஒரு மத்தாப்பூவைக் கொளுத்திப் பாவாடையில் வைத்து விட்டாள். அவ்வளவுதான், தீ வெகுசீக்கிரத்தில் பற்றிக் கொண்டது. அதைக்கண்ட லக்ஷ்மி எங்கோ ஓடிப்போய் விட்டாள். நன்றாக தீ பாவாடையில் பிடித்த பிறகே விஷயத்தை உணர்ந்தாள் ஸரஸ்வதி. 'ஹோ' என்று கத்திக்கொண்டு அங்குமிங்கும் ஓடினள், தீ உபத்ரவம் தாங்காமல் நடுத்தெருவில் சுருண்டுவிழுந்தாள். அதற்குள் பலர் கூடிவிட்டனர். பிறகு ஏதேதோ வைத்யம் செய்தார்கள். லக்ஷ்மியும் நாளடைவில் தன் குற்றத்தையுணர்ந்தாள். அதிலிருந்து அவள் யாரிடமும் அசூயை, துவேஷம் கொள்ளுவதே இல்லை.

குழந்தைகளே! லக்ஷ்மியைப் போல் அசூயை, பொறாமை முதலிய தீய குணங்கள் உங்களிடமிருந்தால் இக் கதையைப் படித்த உடனே விட்டு விடுங்கள். எல்லோரும் ஒற்றுமையாக இருப்பதில்தான் பகவானுக்குப் பிரியம்.

---

# கோபாலன் கோமகனனது

சீகாழி 'மணி'

சிருங்கபேரிபுரம் என்ற சிறு கிராமம் கடற்கரைக்குச் சமீபமாயுளது. அங்கு வாசுதேவனென்ற செம்படவனிருந்தான். அவனுக்கு நீண்டகாலமாய் பிள்ளையில்லை. சமுத்திர கன்னிகையின் அருளால் ஒரு குமாரன் பிறந்தான். அவன் பெயர் கோபாலன். கோபாலன் நல்ல தேகப்பயிற்சி பெற்றான். மல் யுத்தத்தில் தேர்ச்சி அதிகம். ஆயுதப் பயிற்சியும் முடிந்தது.

ஒருநாள் தந்தையிடம் கோபாலன், "அப்பா, நான் ஒரு நிமிஷங்கூட சும்மாயிருக்கமாட்டேன். எனக்கு ஒரு கத்திமட்டும் நம் கிராமக்கொல்லனிடம் தயார் செய்யச்சொல்லுங்கள். என் வீர பராக்கிரமத்தை வெளிப்படுத்தி நம் குடும்பத்தின் பெயரை அழியாது நிலைநாட்டவேண்டும்" என்றான். அப்படியே கத்தி செய்யப்பட்டது. தந்தையிடம் விடைபெற்று, கோபாலன் தன் வீட்டிலிருந்த கருங்குதிரை மீது ஏறிக் கொண்டான். அவனை விட்டு நாய் பின் தொடர்ந்து சென்றது. காற்றினும் கடிய வேகத்துடன் கோபாலன் ஒரு புல் தரையை அடைந்தான். அங்கு ஒரு செத்த ஆடு கிடந்தது. அதன் பக்கத்தில் ஒரு நாய், பருந்து, நீர்க்கிரி

மூன்றுமிருந்தன. ஆட்டின் மாமிசத்தை மூன்று பிராணிகட்கும் கோபாலன் அன்புடன் பங்கிட்டுக் கொடுத்தான். அவைகள் சந்தோஷமாய்த் தின்றன. நாய் கோபாலனைப் பார்த்து "அன்ப! நீ செய்த பேருதவியை மறவேன். என் பற்களும் வேகத்துடன் கூடிய கால்களும் எப்போது நீர் விரும்புகிறீரோ அச்சமயம் உங்கள் கட்டளையைக் நிறைவேற்றக் காத்திருக்கின்றன." என்றது. பருந்து கோபாலன் முன் சென்று "அப்பா! உன் நற்செயலைக் கண்டு மகிழ்ந்தேன். நீ நினைக்கும்போதெல்லாம் நான் என் சிறகுகளால் உனக்கு என்ன உபகாரம் ஆகாயத்திற் பறந்து சென்று செய்ய வேண்டுமோ, அதைச் செய்ய சித்தமாய் இருக்கிறேன்" என்றது. அதற்குள் நீர்க்கிரி "தண்ணீரில் நீந்துவதால் என்ன உதவி உனக்கு நான் செய்யக்கூடுமோ, அதை எந்த நிமிஷமும் தவறாது செய்வேன்" என வாக்களித்தது. இம் மூன்றும் உடனே மறைந்தன.

கோபாலன் வழி நடந்து அரசன் மாளிகையை அடைந்தான். அங்கு அரண்மனை மாடுகள் மேய்க்கும் வேலையை ஒப்புக்கொண்டான். அவனுக்கு அன்றன்று கறந்த பாலின் அளவுக்குத் தக்கபடி சம்பளம் கொடுக்கப்பட்டது. முதல் நாள் கட்டாந்தரையில் புல் இல்லை, மாடுகளுக்கு மேய்ச்சல் போதவில்லை. பால் குறைந்தது. சம்பளமும் குறைவு. மறுநாள் அதிக மேய்ச்சல் கிடைக்கும் புல் தரைக்கு மாடுகளை ஓட்டிச்சென்றான். மேய்ச்சல் அன்று திருப்தி. மாலைப் பொழுதில் மாடுகளை ஓட்டி வீடு திரும்புகையில், ஒருஇராக்ஷஸன் வழி மறித்துக் கொண்டான். உள்ளிருந்து வீரம் கிளம்பியது. எதிர்த்தும் சண்டை செய்தான் கோபாலன். கோபாலனின் கருநாய் இராக்ஷஸனது தொண்டையைபிடித்துக் கொண்டது. கோபாலன் இராக்ஷஸனது கத்தியைக்கொண்டே அவன் தலையைச் சிதைத்தான். குதிரைமீது ஏறி இராக்ஷஸன் குகையை அடைந்தான். அங்கு அளவில்லாத தங்க, வைர நகைகளும் பட்டாடைகளுமிருந்தன. அவைகளைக் கையினுற்கூட கோபாலன் தொடவில்லை. மற்றொருநாள் மேய்ச்சலிலிருந்து திரும்புகையில், இன்னொரு இராக்ஷஸன் வளைத்துக் கொண்டான். கருநாயின் உதவியால், முன் போலவே இவனது தலையையும் வெட்டினுன். கோபாலனது புகழ் ஓங்கியது. பாலின் அளவும் அதிகரித்தது. நாளுக்கு நாள் நல்ல சம்பளம். ஆனந்தமாக ஆடிக்களித் திருந்தான் கோபாலன்.

ஒருநாள் பால் பண்ணையில் கன்னிகை ஒருவள், அழுது கொண்டிருந்தாள். கோபாலன் அவளை "ஏன் அழுகிருய்" எனக்கேட்டான். அதற்கு அவர் "ஐயா! வருஷா வருஷம் இவ்வூருக்குச் சமீபம் உள்ள ஓர் இராக்ஷஸ நாகத்திற்கு அழகு வாய்ந்த கன்னிகையைப் பலியிடுவது வழக்கம். இப்போது அரசனது பெண் பலியிடப்பட வேண்டிய முறை" எனச்சொல்லி விம்மி, விம்மி அழுதாள். கோபாலன் உடனே "அந்த நாகத்தை ஒழிக்க வீரர்களில்லையா?" என்றுன். அப்பெண் "படைத்தலைவர் ஒருவர் நாகத்தை கொல்ல முன் வந்திருக்கிருர். அப்படி அவர் செய்யின், அவருக்கே இராஜகுமாரி மாலையிடுவாள்" என்றுள்.

இப்படி இருவரும் பேசிக் கொண்டிருக்க, வீரம் பேசிய படைத்தலைவன் நாகத்தை கண்டவுடன் நழுவிவிட்டான். இராஜகுமாரி 'இனி என் உயிர் நில்லாது இவ்வளவு தான் வாழ்க்கை. அரசன் மகளாய்ப் பிறந்து அனுதையாய் இறக்கப்போகிறேன்' எனவருந்தினுள். நாகம் வாயைத் திறந்தது. அரசன்பெண் சமீபம் வந்துவிட்டது. கருங் குதிரையில் வீரனெருவன் மின்னல் போல் தோன்றினுன். வந்தவன் அரசகுமாரியைப் பார்த்து, "நங்காய்! உன் மோதிரத்தை என் விரலில் அணிவிப்பாய்" என்றுன். அவளும் அவ்வாறே செய்தாள். கருங் குதிரைவீரன் நாகத்தின் தலையொன்றைக் கொய்தான். நாகம் தன் இருப்பிடம் சென்றுவிட்டது. அப்போது அரசகுமாரி "ஐயா! இன்றிரவு தப்பினேன் நாகத்திற்கு இன்னும் இரண்டு தலைகள்

இருக்கின்றனவே. அது என்னை உயிருடன் வைக்குமா?" எனப் பதறினாள். அதற்கு வீரன், "பயப்படாதே நான் அதை ஒழித்துவிடுகிறேன்" என தைரியம் சொல்லிச் சென்றான்.

இராஜகுமாரி கொய்த நாக இராக்ஷஸன் தலையுடன் அரண்மனை திரும்பினாள். "வழியில் படைத்தலைவன் இந்தத் தலையை யார் அறுத்தது எனக்கேட்டால் என்ன சொல்வாய்?" என்றான். இராஜகுமாரி வி ச ன த் து ட ன் "எல்லாம் தாங்களே செய்தீர்களெனச் சொல்லி விடுகிறேன். இதற்கு என்ன தடை!" எனச் சொல்லிப் போனாள். மறுதினம் கருங்குதிரை வீரன் இராக்ஷஸநாகத்தின் மற்றொரு தலையையும் துண்டித்தான். துண்டிப்பதற்கு முன் அரசகுமாரியின் காதுத் தோடுகளைப் பெற்றுக் கொண்டான். மூன்றாம் நாள், மூன்றாவது தலையும் அறுக்கப்பட்டது. இராக்ஷஸனது துஷ்டத்தனம் அநேகமாய் ஒழிந்தது.

இராஜகுமாரியின் தகப்பன் அவளைப் படைத்தலைவனுக்கு விவாகம் செய்விக்கச் சித்தப்படுத்தினான். ஏன்? நாக இராக்ஷஸனது தலைகளை அறுத்தது படைத்தலைவனென அரசன் நினைத்துக் கொண்டிருந்தான். கலியாணத்திற்கு வேண்டியதெல்லாம் சித்தமாயிற்று. அப்போது இராஜகுமாரி "அப்பா! நாகத்தின் தலைகள் மூன்றும் ஒரு கொம்பில் பிணைக்கப்பட்டிருக்கின்றன. அதை விட்டு அத்தலைகளை எடுப்பவனைத்தான் நான் மணப்பேன்" என்றாள். படைத்தலைவனும் இதர வீரர்களும் அதை எடுக்க முயற்சித்தனர். பலிக்கவில்லை. அப்போது கருங்குதிரை மீது ஒரு வீரன் திடீரெனக் குதித்தான். அவன் தான் நம் கோபாலன். நாக இராக்ஷஸனின் தலையைத் துண்டித்தவன் அவன் வெகு எளிதில் கொம்பில் மாட்டப்பட்டிருந்த தலைகளைக் கழற்றி எடுத்துவிட்டான். சந்தேகத்தை நன்றாய்த் தெளிவுபடுத்த எண்ணி, "நாக இராக்ஷஸனின் தலையை அறுத்தவனிடம் என் மோதிரமும், தோடுகளும் இருக்கவேண்டுமே!" என்றாள். உடனே இருநகைகளையும் பையினின்றும் எடுத்தான் கோபாலன். அரசனுக்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவில்லை. கோபாலன் அரசகுமாரியைமணந்தான்.

சிலகாலம் இன்புற்று வாழ்ந்தனர். ஆயினும், இராக்ஷஸ நாகம் தண்ணீரிலிருக்கும்வரையில் தம்பதிகட்கு ஆபத்து தான் எனத்தெரிந்தது. இருவரும் ஒரு நாள் குளக்கரைக்கு காற்றில் உலாவச் சென்றனர். நாக இராக்ஷஸன் கபந்தன் போல் வாயைப்பிளந்தது. உல்லாசமாய் இராஜ குமாரியுடன் பேசிக் கொண்டிருந்த கோபாலன் இதை கவனிக்கவில்லை. நாகம் விழுங்கியது. இராஜகுமாரி ஒன்றும் தோன்றாமல் அக்கிராம கொல்லனிடம் இவ்விஷயத்தைத் தெரிவித்தாள். அவன் "அம்மா! இதற்கு ஒரேவழிதான். உன் நகைகளை கழற்றிவை, அதை எடுக்க இராக்ஷஸ நாகம் வரும். மேலே உன் புத்திசாலித்தனத்தைக் கொண்டு காரியத்தை சாதித்துக்கொள்" என்றான். அரசகுமாரி அவ்வாறே செய்தாள். நாகம் வாயைத் திறந்து கொண்டு நகைகளை எடுக்க வந்தது. அதன் வாயினின்றும் கோபாலன்வெளிவந்தான். இராஜகுமாரி தனக்கு மாங்கலியப் பிச்சை கொடுத்த மகேஸ்வரனை மனமார வாழ்த்தினாள்.

மற்றொரு நாள், கோபாலனும் இராஜகுமாரியும் குளக்கரையில் நின்றனர். ஐயோ! பாவம். இச்சமயம் இராக்ஷஸ நாகம் இராஜகுமாரியை இழுத்துச் சென்றது. கோபாலனுக்கு ஒன்றும் புரியவில்லை. கிராமக் கொல்லனைச் சந்தித்தான். அவன், "அன்பா! இதற்கு ஒரே உபாயந்தான். இதோ தெரிகிறதே தீவு. அதன் மத்தியில் ஒரு பெண்மான். அதைப் பிடித்துவிட்டால், அதன் வாயிலிருந்து ஒரு காகம் குதிக்கும். அக்காகத்தைப் பிடித்து விட்டால், அதன் வாயினின்றும் ஒரு மீன் விழும், அந்த மீனின் வாயில் ஒரு முட்டை இருக்கிறது. அந்த முட்டையை உடைத்தால், நாக ராக்ஷஸன் இறக்கும்." என்றான்.

ஏரியின் நடுவில் தீவு. ஏரியைக் கடப்பதற்குப் படகில் சென்ருல், நாக ராக்ஷஸன் மூழ்கடித்து விடும். என்ன செய்வான் கோபாலன்; தன் கருங் குதிரை மீது ஏறினன். நாயும் பின் தொடர்ந்து பாய்ந்து சென்றது. தீவை யடைந்தான். பெண் மான் இவனைக் கண்டு மருண்டு ஓடிற்று. அதைப் பிடித் தாக வேண்டுமே! சற்று யோசித்தான். "ஆஹா! இப்போது நான்கண்ட பெரிய நாய் மட்டுமிருந்தால், இந்த மான் நம் கைக்குத் தப்புமா?" என நினைத்தான். உடனே அப்பெரிய நாய் முன் செய்த வாக்குறுதிப்படி வந்தது. மானை கோபாலனது கையில் சிக்கிக்கொள்ளும் படியும் செய்தது. மான் வாயைத் திறந்தது. கரிய நாகம் கத்திக்கொண்டு கிளம்பியது. "இதைப்பிடிக்கவேண்டுமே இப்போது முன் பார்த்த பருந்து மட்டும் இருந்தால் எவ்வளவு சுலப மாய்க் காகம் பிடிபடும்!" என நினைத்தான் கோபாலன். பருந்து பாய்ந்து பறந்துவந்து பரபரப்புடன் காகத்தை ஒரு நொடியில் கோபால னிடம் சேர்த்தது. "கா, கா" எனக் கத்த ஆரம்பித்த காகத்தின் வாயி னின்றும் ஒரு மீன் விழுந்தது. மீன் விழுந்து என்ன பயன்? தண்ணீருக் குள் ஓடிற்று. அப்போது கோபாலன் "ஆஹா! இப்போது அந் நீர்க்கீரி மட்டு மிருந்தால், என்ன எளிதில் மீன் கரை சேரும். கைக்கெட்டியது வாய்க்கு எட்டவேண்டுமே" எனத் துடித்தான். கண் மூடி கண் திறப்பதற்குள் நீர்க்கீரி மீனுடன் கோபாலன் முன் நின்றது. மீனின் வாயைப் பிளந்து பார்த்தான். அதனின்றும் முட்டை விழுந்தது.


முட்டையை உடைக்கக் காலை வைத் தான் கோபாலன். இராக்ஷஸன் "முட்டையை உடைக்காதீர். தங்கள் விருப்பப்படி நடக்கச்சித்தமாய் இருக்கி றேன்" என்றது. உடனே இராஜகுமாரி யை விட்டு விட்டது. கோபாலனை வந்து தழுவிக் கொண்டாள். முட்டையை உடைத்தான் கோபாலன். இராக்ஷஸ நாகம் ஒழிந்தது. கோபாலனும் இராஜ குமாரியும் அரண்மனை சேர்ந்தனர். அரசன் அளவிலா ஆனந்தமுற்று, கோபாலனை தன் நாட்டிற்கு அதிபதி யாக்கினன். கோபாலன் கோமகனுகி பலகாலம் பண்புடன் வாழ்ந்துவந்தான். அவனை கோமகனுக்கியது எது? அவனது ஈகையும், ஜீவகாருண்ணியமுமே.

---


## தியாகம்.

மீரா பென்னும் லெஸ்டரும் ஒருவர் மற்றவரிடமிருந்து விலகியே இருக்கின்றனர். இதைப்பற்றி பேச்செழுந்த பொழுது காந்தியடிகள் "இதில் நான் மீராபென் பேரில் தான் குற்றமென்பேன். மீராபென்னின் மனதில் 'நான் செய்திருக்கும் அளவு இவர் கள் ஏன் தியாகம் செய்யவில்லை?' என்ற எண்ணமிருக்கிறது. ஒருவர் தனது தியாகம் அல்லது தவத்தைக் குறித்து கர்வம் கொள்ளலாகாது. என்னல் ஆன அளவிற்கு நான் செய்கிறேன்; மற்றொருவர் அவ்வளவு செய்யக்கூடவில்லையாயின் நான் ஏன் அவரிடம் கோபம் கொள்ளவேண்டும். தியாக மார்க்கத்தில் செல்பவனுக்கு முதலில் கர்வமுண்டாகும். எனக்கும் ஒரு காலத்தில் உண்டானதுண்டு. ஆனல் சீக்கிரத்தில் சமாளித்துக்கொண்டேன்."

—கன்ச்யாமதாஸ் பிர்லா எழுதிய 'கடல் கடந்த காந்தி'



வேண்டுமென்றே
உங்களை
அவர்கள்
குறிபார்க்கவில்லை



ஆனல் அவதிப்படும் துர்பாக்கியசாலிகளில் ஒருவராக நீங்கள் ஆகலாம். தலைவிதி அப்படி இருந்தால், நீங்கள் அந்தக் கொடுமைக்கு ஆளாவதிலிருந்து தப்ப முடியாது! ஆனல் நீங்கள் **இன்ஷூரன்ஸ்** மூலம் உங்கள் குடும்பத்தை காப்பாற்றிவிட முடியும்.

விவரங்களுக்கு எழுதுக:

**நேஷனல் இன்ஷூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்,**

**7, கௌன்ஸில் ஹௌஸ் தெரு, கல்கத்தா.**

மதராஸ் பிராஞ்சு: **362, சைனு பஜார் ரோடு, சென்னை.**

---




## சந்தாதார்களுக்கு

பாரதமணி இதழ்கள் உரிய காலத்தில் வந்து சேராவிட்டால், அந்தந்த ஆங்கிலமாத முடிவுக்குள் தெரிவிக்க வேண்டும். இல்லாவிடில் காரியாலயத்தார் ஒன்றும் செய்ய முடியாதென்று தெரிவித்துக் கொள்கிறோம்.

'பாரதமணி' காரியாலயத்தார்.

*Edited & Published by K.S. Venkataramani at No 43, Mahadana Street, Mayavaram, Printed by V. Ramamurthi B. A., at the Mirasdars' Welfare Pres 29, Mahadana Street, Mayavaram.*